தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 361 மார்கழி 07
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, திங்கள், டிசம்பர் 22, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**700 பி. டாலர் மதிப்புடன் உலகின் முதல் பெரும் பணக்காரர் எலான் மஸ்க்**

....2-ம் பக்கம்

**2047க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்க பல்வேறு திட்டங்கள்: மத்திய நிதி அமைச்சர் அறிவிப்பு**

...3-ம் பக்கம்

**ஆஷஸ் 3-வது போட்டியிலும் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸி., அணி தொடரை வென்றது**

....6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 94 லட்சம் ரூபாய் செலவிலான 33 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 356 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 11 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், ஆர். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், மனோ தங்கராஜ், பாராளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி, ராணி ஸ்ரீ குமார், ராபர்ட் புரூஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் வகாப், ரூபி மனோகரன், மாவட்ட கலெக்டர் சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழர் நாகரிகத்தின் தொன்மையை அறிய கீழடி, பொருநை அருங்காட்சியங்களை

# பிரதமர் மோடி நேரில் பார்வையிட வேண்டும்

### தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு

நெல்லை, டிச. 22-

**தமிழ்நாட்டில் கட்டியிருக்கக்கூடிய கீழடி, பொருநை அருங்காட்சியகத்தை பிரதமர் நரேந்திர மோடி, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வந்து பார்வையிட வேண்டும் என்று இருவருக்கும் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். அப்போது தான் அவர்கள் தமிழக நாகரீகத்தின் தொன்மை குறித்து அவர்களுக்கு தெரிய வரும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

**புதிய திட்டங்கள்...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (நவ. 21) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி திடலில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரையாற்றினார். அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:- இந்த நெல்லையின் அடையாளமாக விளங்குகிறது நெல்லையப்பர் கோயில். ஏழாம் நூற்றாண்டில், நின்றுசீர் நெடுமாறப் பாண்டியரால் கட்டப்பட்ட இந்த கோயிலை 700 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பித்து திருப்பணிகளை செய்தவர் நம்முடைய தலைவர் கலைஞர். நெல்லையப்பர் கோயிலின் வெள்ளித் தேர் 1991-ல் தீ விபத்தில் எரிந்து போனது.

**வெள்ளித் தேர் ஓடும்..**

கடந்த பிப்ரவரி மாதம், நான் இதே நெல்லைக்கு வந்தபோது மீண்டும் அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று அறிவித்தேன். மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இப்போது அதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டது. இன்னும் சில நாள்களில், அதாவது ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**நிரூபிக்கும் ஆய்வுகள்**

கீழடி தொடங்கி பல வரலாற்று இடங்களில் நாம் மேற்கொள்ளும் அகழாய்வுகளுக்கு, மத்திய பா.ஜ.க. அரசு எப்படியெல்லாம் தடை போடுகிறார்கள் என்று தொடர்ந்து அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அவர்களுடைய எண்ணம் என்ன? தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை நிரூபிக்கும் ஆய்வுகள் எதுவும் நடைபெறக் கூடாது; மீறி நடந்தாலும், அந்த ஆய்வு முடிவுகள் வெளியே வந்துவிடக் கூடாது! இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட, தமிழ் மீதும் – தமிழர்கள் மீதும் வெறுப்போடு செயல்படுபவர்களை எதிர்த்துதான் நாம் இன்றைக்கு உறுதியுடன் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

**ஈராயிரம் ஆண்டுகால**

இல்லாத சரஸ்வதி நதி நாகரிகத்தைத் தேடி அலைபவர்களுக்கு கண் முன்னே நாம் வெளியிடும் ஆய்வுகள் தெரிவதில்லை. அதற்காக நாம் சோர்ந்துவிட முடியுமா?

(கடைசி பக்கம் பார்க்க)

## நெல்லை மாவட்டத்தில்

# 15 புதிய பேருந்துகளின் சேவை: முதல்வர் தொடங்கி வைத்தார்

நெல்லை, டிச. 22-

**நெல்லை மாவட்டத்திற்கு 15 புதிய பேருந்து போக்குவரத்து சேவையை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.**

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நெல்லை மாவட்டத்தில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். அதன்படி அவர் நேற்று முன்தினம் சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடிக்கு புறப்பட்டார். அவர் அங்கிருந்து கார் மூலம் நெல்லைக்கு சென்றார்.

அவருக்கு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் கிரகாம்பெல் தலைமையில் சாரதா கல்லூரி அருகிலும், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பாலம் அருகே மத்திய மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் அப்துல் வகாப் எம்.எல்.ஏ. தலைமையிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கிருந்து நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை சென்றார். அங்கு மதிய உணவுக்கு பின்னர் நிர்வாகிகளை சந்தித்தார். தொடர்ந்து மாலை 4 மணியளவில் வண்ணார்பேட்டை தெற்கு புறவழிச் சாலை வழியாக டக்கரம்மாள்புரம் சென்று அங்கு நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றார். தொடர்ந்து ரெட்டியார்பட்டி மலை 4 வழிச்சாலை அருகே அமைக்கப்பட்டுள்ள, அகழாய்வு பொருட்களை காட்சிப்படுத்தவும், தமிழர்களின் நாகரிகத்தை பறைசாற்றும் வகையிலும் ரூ.62 கோடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

இந்தநிலையில், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி அளவில் வண்ணார்பேட்டையில் இருந்து புறப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விழா மேடைக்கு சென்றார். அங்கு அரசு சார்பில் நடைபெற்ற விழாவில் மொத்தம் ரூ.639 கோடியில், காயிதே மில்லத் நினைவு நூலகம் உள்ளிட்ட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிடம் உள்பட முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைத்தார். விழாவில் 45 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதனிடையே, நெல்லை மாவட்டத்திற்கு 15 புதிய பேருந்து போக்குவரத்து சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# நெல்லைக்கு 3 புதிய அறிவிப்புகள்: முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

நெல்லை, டிச. 22-

**ரூ.16 கோடி செலவில், அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய மகளிர் தங்கும் விடுதி உள்ளிட்ட திருநெல்வேலி மாவட்டத்திற்கு 3 முக்கிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.**

திருநெல்வேலி மாவட்டத்திற்கு இரண்டு நாள்கள் சுற்றுப்பயணமாக சனிக்கிழமை வந்த தமிழக முதல்வருக்கு திமுக தொண்டர்களும், பொதுமக்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையை அடுத்த ரெட்டியார்பட்டி மலைப் பகுதியில் 13 ஏக்கர் பரப்பில் 54,296 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் (டிச. 20) திறந்து வைத்தார்.

நேற்று (டிச. 21) திருநெல்வேலி, அரசு மருத்துவக் கல்லூரி திடலில் நடைபெற்ற அரசு விழாவில் திருநெல்வேலி மாவட்டத்துக்கான முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி, உரையாற்றினார். அப்போது, நெல்லை மாவட்டத்துக்கான 3 முக்கிய அறிவிப்புகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

**முதல் அறிவிப்பு:**

திருநெல்வேலி மாநகர், காந்திநகரில் அமைந்திருக்கக் கூடிய ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில், ரூ.16 கோடி செலவில், அனைத்து வசதிகளுடன் புதிய மகளிர் தங்கும் விடுதி அமைக்கப்படும்.

**2-வது அறிவிப்பு:**

சேரன்மகாதேவி வட்டம் முக்கூடல், பாப்பாக்குடி கிராம விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையில், காங்கேயன் கால்வாய் மற்றும் வெள்ளோடையை மேம்படுத்தும் பணிகள் ரூ. 4 கோடியே 1 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**3-வது அறிவிப்பு:**

நான்குநேரி மற்றும் ராதாபுரம் வட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ரூ. 5 கோடி செலவில், வள்ளியூர் பெரிய குளம் மற்றும் வள்ளியூரான் கால்வாய் ஆகியவை புனரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில்

# ரூ.98 கோடியில் அமையவுள்ள காயிதே மில்லத் புதிய நூலகம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

நெல்லை, டிச. 22-

**நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் ரூ.98 கோடியில் அமையவுள்ள காயிதே மில்லத் புதிய நூலகத்திற்கு நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.**

தென்னிந்தியாவின் ஆகஸ்போர்டு என அழைக்கப்படும் நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிறுவ னங்கள் அதிகம் உள்ளன. மேலும் ஒவ்வொரு ஆண்டும் தேசிய, மாநில அளவில் நெல்லை மாவட்டம் கல்வியில் சாதனை படைத்து வருகிறது. உயர் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளும் நெல்லையில் அதிகமாக உள்ளனர். நெல்லை, தூத்துக்குடி தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களை சேர்ந்த பொறியியல் பட்டதாரிகள், விஞ்ஞானிகள் என பலர் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உயர் அறிவியல் நிறுவனங்கள், ஐ.டி. நிறுவனங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க பாளையங்கோட்டையில் அண்ணா, கலைஞர் நூற்றாண்டு நூலகம் போன்று அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம் மாணவ-மாணவிகள், போட்டி தேர்வாளர்கள், உயர் கல்வி கற்பவர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் அமைக்க வேண்டுமென்று பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்து பேசினார். மேலும் முதலமைச்சரிடமும் இது தொடர்பாக கோரிக்கை மனு அளித்தார்.

இதையடுத்து பாளையங்கோட்டையில் ரூ.98 கோடியில் அனைத்து வசதிகளுடன் கூடிய நூலகம் அமைக்கப்படும் என கடந்த மார்ச் மாதம் 14-ம் தேதி சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டு அந்த நூலகத்திற்கு காயிதே மில்லத் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து நூலகம் அமைப்பதற்காக பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கத்திற்கு கீழ் பகுதியில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரிக்கு

(கடைசி பக்கம் பார்க்க)

# நாடு முழுவதும் டிச.26 முதல் ரயில் கட்டணம் உயருகிறது

### 215 கி.மீ வரை கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லை

புதுடெல்லி, டிச. 22-

**நாடு முழுவதும் வரும் டிசம்பர் 26ம் தேதி முதல் ரயில் கட்டணத்தை மாற்றி அமைத்து ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. 215 கி.மீ வரை பயணித்தால் கட்டணத்தில் ஏதும் மாற்றமில்லை. மேலும் புறநகர் ரயில்கள், மாதாந்திர சீசன் டிக்கெட்டுகளுக்கு கட்டண உயர்வு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து ரயில்வே நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது., நாடு முழுவதும் வரும் டிசம்பர் 26ம் தேதி முதல் ரயில் கட்டணம் மாற்றி அமைக்கப்படுகிறது. புறநகர் ரயில்கள், மாதாந்திர சீசன் டிக்கெட்டுகளுக்கு கட்டண உயர்வு இல்லை. சாதாரண வகுப்பில், 215 கிமீ வரை பயணிப்போருக்கு கட்டண உயர்வு ஏதும் கிடையாது.

முன்பதிவில்லாத சாதாரண வகுப்பில், 215 கிமீக்கு மேல் பயணிப்போருக்கு கிலோமீட்டருக்கு ஒரு பைசா அதிகரிப்பட்டு உள்ளது. 215 கி.மீ தூரத்திற்கு மேல் மெயில், எக்ஸ்பிரஸ் ரயில்களில், ஏசி, ஏசி இல்லாத வகுப்பில் பயணிப்போருக்கு ஒரு கிமீக்கு 2 பைசா கட்டணம் அதிகரிக்கப்பட்டு உள்ளது. கட்டண உயர்வால் இந்த ஆண்டில் கூடுதலாக ரூ.600 கோடி வருவாய் கிடைக்கும்.

ஏசி இல்லாத பெட்டிகளில் 500 கி.மீ பயணத்திற்கு, பயணிகள் 10 ரூபாய் கூடுதலாகச் செலுத்த வேண்டும். கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே நிர்வாகம் தனது சேவைகளை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது. பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், அதிகம் கவனம் செலுத்துகிறது. இதன் விளைவாக செலவு ரூ. 1,15,000 கோடியாக அதிகரித்துள்ளது. 2024-25ம் ஆண்டில் மொத்த செயல்பாட்டுச் செலவு 2,63,000 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

அதிக செலவினங்களை சமாளிக்க, பயணிகள் கட்டணத்தில் ஒரு சிறிய அளவு மாற்றம் செய்யப்படுகிறது. இந்தியா உலகின் இரண்டாவது பெரிய சரக்கு போக்குவரத்து ரயில்வேயாக மாறியுள்ளது. சமீபத்தில் பண்டிகைக் காலங்களில் 12,000க்கும் மேற்பட்ட ரயில்களை வெற்றிகரமாக இயக்கப்பட்டு இருக்கிறது. தனது இலக்குகளை அடைவதற்காக, ரயில் சேவைகளை அதிகரிக்கவும், செலவுகளைக் கட்டுப்படுத்தவும் ரயில்வே நிர்வாகம் தொடர்ந்து பாடுபடும். இவ்வாறு அதல் தெரிவிக்கப் பட்டு உள்ளது.

## அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில்

# ரூ.10,601 கோடி மதிப்பில் புதிய உரத் தொழிற்சாலை

### பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல்

கவுகாத்தி, டிச. 22-

**அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில் ரூ.10,601 கோடி மதிப்பில் அமையவுள்ள புதிய உரத் தொழிற்சாலைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.**




அசாம் மாநிலம், திப்ருகார் மாவட்டத்தில் ரூ.10,601 கோடி மதிப்பில் உரத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி பிரதமர் மோடி பேசியதாவது: அசாம் மாநிலத்தை வளர்ச்சி அடைந்ததாக மாற்றுவதே எங்கள் நோக்கம். தொழில் மயமாக்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் அசாம் மாநில இளைஞர்களைப் பெரிய கனவுகளைக் காணத் தூண்டுகின்றன. யூரியா உரத் தொழிற்சாலை உள்ளூர் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அசாம் மாநில இளைஞர்களுக்கு ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

உர ஆலையை நவீனமயமாக்கவும், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவும் காங்கிரஸ் கட்சி எந்த முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. அவர்கள் விவசாயிகளின் பிரச்னைகளை புறக்கணித்து, ஊடுருவல்காரர்களை காப்பாற்றினர். ஓட்டு வங்கியை பாதுகாக்க காங்கிரஸ் ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவாக செயல்பட்டது. காங்கிரஸ் செய்த தவறுகளை சரி செய்ய, பா.ஜ.க. இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டியுள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க விவசாயிகள் முக்கிய பங்கு வகிப்பார்கள். அவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, எங்கள் அரசு அவர்களுக்கு ஆதரவளிக்க அயராது உழைத்து வருகிறது. நமது விவசாயிகளுக்கு தொடர்ந்து உரங்கள் விநியோகம் கிடைப்பதை உறுதி செய்வது அவசியமாகும்.

இந்த புதிய யூரியா தொழிற்சாலை, அந்த தேவையை பூர்த்தி செய்யும். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னரே விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் தொடங்கியது. காங்கிரஸ் அசாம் மக்களின் நலனை பற்றி கவலைப்படுவதில்லை. அவர்கள் அதிகாரித்தில் மட்டுமே ஆர்வம் காட்டுகிறார்கள். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 447.55 | 150.85 |
| பாயிண்ட் 84,929.36 | பாயிண்ட் 25,966.40 |



**தங்கம்**
1 சவரன் ₹99,200
1 கிராம் ₹12,400



**வெள்ளி**
1 கிலோ ₹226,000
1 கிராம் ₹226.00

**டாலர்** ₹89.58

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### உலகின் முதல் பெரும் பணக்காரர்:
# 700 பி. டாலர் மதிப்புடன் எலான் மஸ்க் முதலிடம்

**நியூயார்க், டிச. 22-**

டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க்கின் நிகர சொத்து மதிப்பு 700 பில்லியன் டாலரைத் தாண்டியது.

ஸ்பேஸ்எக்ஸ், ஸ்டார்லிங்க், டெஸ்லா நிறுவனங்களின் நிறுவனரான எலான் மஸ்க்கின் நிகர சொத்து மதிப்பு 700 பில்லியன் டாலருக்கும் அதிகமாக உயர்ந்து, உலகின் முதல் பெரும் பணக்காரராக மேலும் உயர்ந்துள்ளார். டெஸ்லா நிறுவனத்தின் மீதான வழக்கில், எலானுக்கு சாதகமாக தீர்ப்பு



அமைந்ததால், எலானின் நிகர சொத்து மதிப்பு 749 பில்லியன் டாலர் என்றளவில் உயர்ந்தது.

கடந்த அக்டோபர் மாதத்தில் எலானின் சொத்து மதிப்பு 500 பில்லியன் டாலர் மதிப்பாக இருந்தது. இந்த நிலையில், 800 பில்லியன் டாலர் மதிப்பீட்டு சந்தையில் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் பட்டியலிடப்பட வாய்ப்பிருப்பதாகத் தகவல் வெளியான நிலையில், டிசம்பர் 2வது வாரத்தில் எலானின் சொத்து மதிப்பு 600 பில்லியன் டாலரை எட்டியது. தற்போது, ஒரே வாரத்தில் 700 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

# பூமியின் சுழற்சியிலிருந்து மின்சாரம் தயாரித்த அமெரிக்க விஞ்ஞானிகள்..!

**நியூயார்க், டிச. 22-**

பூமியின் சுழற்சி, காந்தப் புலத்தைப் பயன்படுத்தி எரி பொருள் இன்றி மின்சாரம் தயாரிக்கும் சிறிய கருவியை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் நாசாவின் ஜெபிஎல் ஆய்வக விஞ்ஞானிகள் இணைந்து, பூமியின் சுழற்சி மற்றும் காந்தப்புலத்தைப் பயன்படுத்தி எரிபொருள் இன்றி மின்சாரம் தயாரிக்கும் சிறிய கருவி ஒன்றை உருவாக்கியுள்ளனர். பூமியின் காந்தப்புலத்தில் உள்ள ஒரு நுணுக்கமான இடைவெளியைப் பயன்படுத்தி, 17 மைக்ரோவோல்ட் மின்சாரத்தை வெற்றிகரமாக உற்பத்தி செய்து சாதித்துள்ளனர்.

மாங்கனீசு - துத்தநாக பெரைட் உருளையைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட இந்தச் சோதனையில், பூமி சுழலும்போது ஏற்படும் காந்த விசை மின்சாரமாக மாற்றப்பட்டுள்ளதோடு, இதனைப் பெரிய அளவில் மேம்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூரிய ஒளி அல்லது காற்று இன்றி, பூமியின் தடையற்ற சுழற்சியிலிருந்து மட்டும் மின்சாரம் எடுக்கும் இந்தக் கருவி, ஒருமுறை நிறுவப்பட்டால் தேய்மானம் அடையாமல் தொடர்ந்து இயங்கும் 'பேட்டரி' போலச் செயல்படும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகம் முழுவதற்கும் தேவையான மின்சாரத்தை எடுத்தாலும், அடுத்த 100 ஆண்டுகளில் பூமியின் சுழற்சி வேகம் ஒரு மில்லி செகண்டிற்கும் குறைவாகவே குறையும் என்பதால் இது பாதுகாப்பானது என ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

# தென் ஆப்பிரிக்காவில் பயங்கரம்: துப்பாக்கி சூட்டில் 9 பேர் பலி

**கேப் டவுன், டிச. 22-**

தென் ஆப்பிரிக்காவில் துப்பாக்கி சூட்டில் 9 பேர் பலியான நிலையில், 10 பேர் படுகாயமடைந்தனர்.

தென் ஆப்பிரிக்காவின் கவுத்இங் மாகாணம் பெக்ஹர்டெல் நகரில் இரவு நேர கேளிக்கை விடுதி உள்ளது. இந்த கேளிக்கை விடுதியில் இன்று அதிகாலை வாடிக்கையாளர்கள் 30க்கும் மேற்பட்டோர் இருந்தனர். அப்போது, இந்த கேளிக்கை விடுதிக்கு கார்களில் வந்த 12 பேர் கொண்ட கும்பல் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியது. இந்த துப்பாக்கி சூட்டில் 9 பேர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு காரி தப்பிச்சென்ற 12 பேர் கொண்ட கும்பலை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# உக்ரைன் போர் முடிவுக்கு வருமா...? அமெரிக்கா-ரஷ்யா பேச்சுவார்த்தை

**வாஷிங்டன், டிச. 22-**

உக்ரைன் , ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 396வது நாளாக போர் நீடித்த நிலையில், போரை நிறுத்த அமெரிக்கா - ரஷ்யா அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

உக்ரைன் , ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 396வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்கா, ரஷ்யா அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் ரஷ்ய அதிபர் புதினின் சிறப்பு தூதர் கிரில் டிமிட்ரிவ் , அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விக்ட்ஆப் ஆகிய இருவரும் இந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த பேச்சுவார்த்தையில் டிரம்ப்பின் மருமகன் ஜெரட் குஷ்னரும் பங்கேற்றார். இந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு உக்ரைன் - ரஷ்யா போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் பொருநை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல் தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக்காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்களை உலகத்தமிழர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கண்டு தமிழ்நாட்டின் தொன்மையை அறிந்துகொள்ளும் வகையில் திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் ரூ.56.36 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

# நடிகர் விஜய்யை விட அரசியல் விஜய் மிகவும் சக்திவாய்ந்தவர்
## த.வெ.க. நிர்வாகி அருண் ராஜ் பேட்டி

**கோவை, டிச. 22-**

விஜய் இப்போது நடிகர் அல்ல என்றும் நடிகர் விஜய்யை விட அரசியல் விஜய் மிகவும் சக்திவாய்ந்தவர் என்றும் த.வெ.க. கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோவையில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், கூட்டணி குறித்து உரிய நேரத்தில முடிவு எடுக்கப்படும். கடந்த மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டணி பேச்சுவார்த்தைக்காக குழு அமைக்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விஜய் அந்த குழுவை அமைப்பார்.

விஜய் இப்போது நடிகர் கிடையாது. அவர் முன்னாள் நடிகர். நடிப்பை முழுவதுமாக விட்டுவிட்டு அரசியலுக்கு வந்திருக்கிறார். மக்களுக்கு சேவை செய்ய வேண்



டுமென வந்திருக்கிறார். ஈரோட்டில் கிட்டதட்ட 1 லட்சம் பேர் வந்தார்கள். அவர்கள் என்ன நடிகரைப் பார்க்கவா வந்தார்கள்.

தமிழ்நாட்டின் முதன்மை அரசியல் சக்தியாக இருக்கும் த.வெ.க. தலைவரைப் பார்க்க வந்தார்கள். தமிழ்நாட்டிற்கு மாற்றம் வேண்டும் என வந்த தொண்டர்கள். நாங்கள் யாரும் நாய்கள் கிடையாது, மனிதர்கள். நடிகர் விஜய்யை விட அரசியல் விஜய் மிகவும் சக்திவாய்ந்தவர்.

அரசியலில் இன்னும் சில பேர் நடித்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பெரியாரின் பகுத்தறிவுடைய உண்மையான தொண்டர்கள். தரம்தாழ்ந்து விமர்சனம் செய்தால் கண்டிப்பாக மீடியா பார்வை வரும். ஆனால் நாங்கள் அத்தகைய அரசியல் செய்பவர்கள் அல்ல. இவ்வாறு குறிப்பிட்டார்.

# வங்காளதேசத்தில் மீண்டும் வன்முறை: அரசியல் தலைவர் வீட்டுக்கு தீவைப்பு

**டாக்கா, டிச. 22-**

வங்காளதேசத்தில் அரசியல் கட்சி தலைவர் ஒருவர் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதில் அவரது 7 வயது மகள் உயிரிழந்து உள்ளார்.

வங்காளதேசத்தில் கடந்த ஆண்டு பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்ததற்கு காரணமாக இருந்த மாணவர்கள் போராட்டத்தை முன்நின்று நடத்தியவர்களில் முக்கிய தலைவராக இருந்த ஷெரீப் உஸ்மான் ஹாடி(வயது 32) மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனால் வங்காளதேசத்தில் கடந்த 11-ந்தேதி இரவு இளைஞர்கள் போராட்டங்களில் குதித்தனர். இதில் பயங்கர வன்முறை வெடித்தது. அரசியல் தலைவர்களின் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது.

ஷெரீப் உஸ்மான், இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட வர் என்பதால் இந்திய தூதரகங்கள், இந்திய தூதர் வீடு ஆகியவை மீது கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும், இந்து இளைஞர் ஒருவர் அடித்து கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் மாலை பாராளுமன்றத்தை கைப்பற்ற இளைஞர்கள் முயன்றதால் பதற்றம் ஏற்பட்டது.

இந்தநிலையில் அரசியல் கட்சி தலைவர் ஒருவர் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதில் அவரது 7 வயது மகள் உயிரிழந்து உள்ளார். வங்காளதேச தேசியவாத கட்சியின் அமைப்பு செயலாளரும், தொழில் அதிபருமான பெலால் ஹொசைன் பபானிகஞ்ச் பகுதியில் வசித்து வருகிறார்.

இதற்கிடையே நேற்று முன்தினம் அதிகாலை பெலால் ஹொ சைன் வீட்டுக்கு கும்பல் ஒன்று தீ வைத்தது. வீட்டின் கதவுகளை வெளிப்புறமாக பூட்டிவிட்டு பெட்ரோலை ஊற்றி தீ வைத்துவிட்டு தப்பினர். இதில் பெலால் ஹொசைனின் 7 வயது மகள் ஆயிஷா அக்தர் தீயில் கருகி உயிரிழந்தார்.

மேலும், பெலால் ஹொசைனும், அவரது மற்ற 2 மகள்களான சல்மா அக்தர் (வயது 16), சாமியா அக்தர் (14) ஆகியோர் காயம் அடைந்தனர். அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். 3 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே சுட்டு கொல்லப்பட்ட ஷெரீப் உஸ்மான் ஹாடி உடல் அடக்கம் நேற்று மதியம் நடந்தது. இதில் ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டார்.

மாணவர் இயக்க தலைவர் இறுதிச் சடங்கில் பங்கேற்ற இடைக் கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் பேசும்போது, வங்கா ளதேசம் இருக்கும் வரை ஷெரீப் உஸ்மான் அனைத்து வங்காளதேச மக்களின் இதயங்களிலும் நிலைத்திருப்பார். நீங்கள் எங்களிடம் கூறியதை நாங்கள் நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

அவரது வார்த்தைகளும் தொலைநோக்குப் பார்வையும் தேசத்தின் நினைவில் நிலைத்திருந்து எதிர்கால சந்ததியினருக்குத் தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என்றார்.

இந்த நிலையில் வங்காள தேசத்தில் உள்ள இந்திய தூதரங்கள், விசா மையங்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.


தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அரியானாவில் நிலநடுக்கம்

**சண்டிகர், டிச. 22-**

அரியானாவில் உள்ள ரோஹ்தக் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. நேற்று மதியம் 12.13 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.3 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. 5 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.78 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 76.73 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கம் லேசாக பதிவானதால் எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை என தெரிகிறது.

**22-12-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** விடுமுறைக் கால உல்லாசமான சுற்றுலாப் பயணங்களால் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கும். காதல் மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும். செல்வம் சேரும்.

**ரிஷபம்:-** முறையற்ற வழிகளில் சென்றால் கஷ்டப்பட நேரும். மனைவியின் வாய்த்துடுக்கால் உறவுகளுக்குள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் ஆதாயம் அடைவீர்கள்.

**மிதுனம்:-** குடும்பத்தோடு செல்லும் குறுகிய தூரப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். சொகுசான புதிய வாகன யோகம் ஏற்படும். தொழிலில் ஏற்படும் மாற்றங்களால் வருமானம் கூடும்.

**கடகம்:-** எல்லா வளமும் பெருகும். தொழில் வளர்ச்சிகாக வரும் வாய்ப்புகளை நழுவவிடாதீர்கள். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும். பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனிவீடும் அமையும்.

**சிம்மம்:-** பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். பிறர் குறைகூறா வண்ணம் தங்கள் மரியாதையைக் காத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தாரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கன்னி:-** முயற்சிகள் தாமதமாவதால் மனதில் சஞ்சலம் ஏற்படும். தாயின் உடல்நிலையில் சிறப்பு கவனம் தேவை. தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதிருந்தால் வெற்றி உங்கள் பக்கம்.

**துலாம்:-** வியாபார முன்னேற்றத்திற்கான புது ஆலோசனைகளும் நல்ல வாய்ப்புகளும் தேடிவரும். பலவகையிலும் பணவரவு கூடும். புதிய நண்பர்கள், உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.

**விருச்சிகம்:-** வரவுக்கு மிஞ்சிய, சமாளிக்க முடியாத அளவுக்குச் செலவுகள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்க, பிறர் விவகாரங்களில் மூக்கை நுழைக்காது இருப்பது நல்லது.

**தனுசு:-** தொழிலில் தன்னம்பிக்கையும், மனதில் மகிழ்ச்சியும் கூடும். வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை எய்தி, வருமானத்தைக் கூட்ட முயல்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**மகரம்:-** பெண்களால் விரயச்செலவுகள் ஏற்படும். நான்கு சுவற்றுக்குள் இருக்க வேண்டிய குடும்ப விவகாரங்களை பொது இடத்தில் பேசாதீர்கள். புதிய பொருட்களை யோசித்து, அவசியப்பட்டால் மட்டும் வாங்குங்கள்.

**கும்பம்:-** வீட்டில் மகிழ்ச்சி நிலவும். திருமணம் போன்ற கொண்டாட்டங்களில் கலந்து மகிழ்வீர்கள். வியாபாரம் அதிகரித்து இலாபத்தை புதிய சேமிப்புக்களில் முதலீடு செய்வீர்கள்.

**மீனம்:-** மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் அரசு அதிகாரிகளுக்குத் தன்னம்பிக்கை கூடும். ஆரோக்கியம் மேம்பட்டு தேகதிடம் அதிகரிக்கும். எதிர்பாரத முன்னேற்றங்களால் வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

# தி.மு.க. கூட்டணியில் தொடர காரணம் என்ன? தொல். திருமாவளவன் விளக்கம்

**மதுரை, டிச. 22-**

பதவி ஆசை இல்லாததே தி.மு.க. கூட்டணியில் தொடரக் காரணம் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் விளக்கமளித்தார்.

எவிடென்ஸ் அமைப்பின் செயல் இயக்குநர் கதிர் எழுதிய 'கருப்பு ரட்சகன்' நூல் வெளியீட்டு விழா மதுரை உலகத் தமிழ்ச் சங்கக் கூட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டார். பின்னர், அவர் பேசியதாவது: முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்ந்த போது, நான் தி.மு.க. கூட்டணியில் தொடர்ந்ததை சிலர் இன்றும் விமர்சிக்கின்றனர். வேங்கைவயல் உள்ளிட்ட பல பட்டியலின மக்கள் பிரச்னைகளின் போதும் என் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. வேங்கைவயல் விவகாரத்தில் சம்பவம் நடைபெற்ற இரண்டாம் நாளே போராட்டத்தை அறிவித்து நடத்தினோம்.

கூட்டணி என்பதற்காக உரிமைகளை விட்டுக் கொடுத்து மக்களை மறந்து தனிநபராக என்னுடைய நலன் குறித்து நான் சிந்தித்தது இல்லை. அப்படி எந்த முடிவையும் நான் எடுத்ததில்லை. தி.மு.க. ஆட்சியில் அரசுக்கும், காவல் துறைக்கும் எதிராக எங்களைப் போல போராடியவர்கள் யாருமில்லை.

சகோதரத்துவத்தைத் தகர்க்கப் பார்க்கின்றனர். உண்மையான தமிழ் தேசியம் என்பது சநாதன எதிர்ப்பில்தான் அடங்கியிருக்கிறது. மத வழி தேசியத்தை எதிர்ப்பதுதான் உண்மையான தமிழ் தேசியம். இந்தியா முழுமைக்கும் ஒரே மதம்தான் இருக்க வேண்டும் என்பது பாஜகவின் அரசியல். அதை எதிர்ப்பதற்கான ஆயுதமாக நாம் முன் வைக்கும் பெரியாரையே இல்லாமல் ஆக்குவோம் என சொல்வது ஆபத்தான விஷயம். குறிப்பாக, மதுரையை சநாதன மையமாக மாற்ற முயற்சிக்கின்றனர்.

அரசியல் ஆதாயத்துக்காக ஜாதிய உணர்வுகளைத் திட்டமிட்டு வளர்க்கின்றனர். ஜனநாயக உணர்வை சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக ஜாதி, மத உணர்வுகளைத் தூண்டுவது மிகவும் ஆபத்தான செயல்.

தேர்தலில் அதிக இடங்கள் அளிக்கும் கட்சியோடு வி.சி.க. கூட்டணி அமைக்கலாம். 10 இடங்கள் கூடுதலாகப் பெறுவதால் எந்த மாற்றமும் நிகழ்ந்து விடாது.

பதவி நமக்கு முக்கியமில்லை. பல்வேறு விவகாரங்களில் கடும் விமர்சனங்களுக்குப் பின்னரும் தி.மு.க. கூட்டணியில் வி.சி.க. தொடருவதற்கு பதவி ஆசை இல்லாததே காரணம் என்றார்.

# 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை: போராட்டத்துக்கு இம்ரான்கான் அழைப்பு

**லாகூர், டிச. 22-**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் 2023-ம் ஆண்டு முதல் ராவல்பிண்டியில் உள்ள அடிலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய ரகசிய தகவல்களை கசியவிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கிடையே தோஷகானா ஊழல் வழக்கில் இம்ரான்கானுக்கும், அவரது மனைவி புஷ்ரா பீபிக்கும் தலா 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து



சிறப்பு கோர்ட் தீர்ப்பு அளித்தது.

இந்த நிலையில் நாடு தழுவிய போராட்டங்களுக்குத் தயாராகும்படி இம்ரான் கான் தனது கட்சியினர் மற்றும் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இம்ரான்கானின் எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதில், "கைபர் பக்துன்க்வா மாகாண முதலமைச்சர் சோஹைல் அப்ரிடிக்கு போராட் டத்திற்குத் தயாராகும்படி நான் ஒரு செய்தியை அனுப்பியுள்ளேன். முழு தேசமும் அதன் உரிமைகளுக்காக எழுந்து நிற்க வேண்டும். இந்தத் தீர்ப்பு எந்த ஆதாரமும் இல்லாமல், சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் நீதிபதியால் அவசரமாக வழங்கப்பட்டது. இவ்வழக்கில் எனது சட்டக் குழுவின் வாதங்கள் கேட்கப்படவே இல்லை" என்று தெரிவித்து உள்ளார்.

# கிழக்கு சீன கடல் பகுதியில் உலகின் மிகப்பெரிய தங்கப்படிமம் கண்டுபிடிப்பு

**பெய்ஜிங், டிச. 22-**

கிழக்கு சீன கடல் பகுதியில், ஆசியாவின் மிகப்பெரிய கடலுக்கடியிலான தங்க படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது.

நம் அண்டை நாடான சீனா, உலகிலேயே அதிகளவு தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது. அதே நேரத்தில் தங்க கையிருப்பில், ஆப்ரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த இடத்தில் உள்ளது. கடந்த, 2021ல் இருந்து தங்கப் படிமங்களை கண்டுபிடிப்பதில் சீனா தீவிரம் காட்டி வருகிறது. அதன்படி, வடகிழக்கு மாகாணமான லியானிங்கில், 14.44 லட்சம் கிலோ தங்க இருப்பு கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தவிர, ஜின்ஜியாங் உய்குர் பிராந்தியத்தில் உள்ள மலையில், 10 லட்சம் கிலோ தங்க இருப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், ஷான்டாங் மாகாணத்தின் யாண்டாய் நகரில் உள்ள லைஜோ கடற்கரைக்கு அப்பால், கடலுக்கு அடியில் ஒரு பிரமாண்டமான தங்க படிமத்தை சீனா கண்டுபிடித்துள்ளது. இது ஆசியாவின் கடலுக்கடியில் உள்ள மிகப்பெரிய தங்க இருப்பு என கூறப்படுகிறது. சமீபத்தில் கண்டறியப்பட்ட இந்த தங்க இருப்பின் வாயிலாக லைஜோவின் ஒட்டுமொத்த தங்க இருப்பு 39 லட்சம் கிலோவுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இது சீனாவின் தேசிய தங்க இருப்பில் தோராயமாக 26 சதவீதமாகும். இந்த கண்டுபிடிப்பின் வாயிலாக லைஜோ பகுதி, சீனாவின் தங்க இருப்பு மற்றும் தங்க உற்பத்தி ஆகிய இரண்டிலும் முதலிடத்தை பிடித்துள்ளது.

வாக்களிப்பது நமது கடமை

# வரலாற்றை படிப்பவர்கள்தான் வரலாறு படைக்க முடியும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**நெல்லை, டிச. 22-**

வரலாற்றைப் படிப்பவர்கள்தான் வரலாறு படைக்க முடியும் என முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.



தமிழர்களின் தொன்மையை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் மிகப் பிரம்மாண்டமாக கட்டப்பட்ட பொருநை அருங்காட்சியகத்தை சனிக்கிழமை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழினத் தொன்மையின் அடையாளமாக ஒளிரும் நெல்லை பொருநை அருங்காட்சியகம்! காண்போரின் விழிகள் விரிகின்றன; தமிழர்தம் நாகரிக உச்சம் பார்த்து மனம் எழுச்சி கொள்கிறது. மரபும் புதுமையும் சந்தித்துக் கைக்குலுக்கிக் கொள்ளும் வரலாற்று மாளிகையாக நம் அரசு கட்டியுள்ள பொருநை அருங்காட்சியகம் - உலகத் தமிழர் ஒவ்வொருவரும் கண்டுணர வேண்டிய பண்பாட்டுக் கருவூலம்.

வரலாற்றைப் படிப்பவர்கள்தான் வரலாறு படைக்க முடியும். பழம்பெருமையில் தேங்கிடாமல் இன்னும் உயர்ந்து 'முன் செல்லடா...' என நம்மை உந்தித் தள்ளும் ஊக்க மருந்தாக பொருநை அருங்காட்சியகம் அமையும் என நம்பித் தமிழ்நாட்டுக்கு அர்ப்பணித்துள்ளேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆம்னி பேருந்து கட்டணம் உயர்வு

**சென்னை, டிச. 22-**

தமிழகத்தில் ஆம்னி பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சென்னையில் வேலை பார்த்துவரும் வெளியூரை சேர்ந்த மக்கள், பண்டிகை மற்றும் விடுமுறை தினங்களில் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அந்த வகையில், பள்ளி அரையாண்டு விடுமுறை, கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு என என அடுத்தடுத்து விடுமுறை வரவுள்ளது. இதை யொட்டி, மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்ல ஆயத்தமாகி வருகின்றனர். பலர் ரெயில்களிலும், பேருந்துகளிலும் முன்பதிவு செய்து வருகின்றனர்.

தொடர் விடுமுறையையொட்டி, மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்லவுள்ள நிலையில், ஆம்னி பேருந்துகளின் கட்டணம் கிடுகிடுவென அதிகரித்துள்ளது. சென்னையில் இருந்து மதுரை செல்வதற்கு ரூ.1,900 முதல் ரூ.4,000 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அதேபோல, சென்னையில் இருந்து கோவை செல்ல ரூ.2,000 முதல் ரூ.5,000 வரையும், நாகர்கோவில் செல்ல ரூ.2,500 முதல் ரூ.4,500 வரையும், நெல்லை செல்வதற்கு ரூ.2,000 முதல் ரூ.4,500 வரையும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. தொடர் விடுமுறை எதிரொலியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் பயணிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# 2047-க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்க பல்வேறு திட்டங்கள்

## மத்திய நிதி அமைச்சர் தகவல்

**பெங்களூரு, டிச. 22-**

2047ம் ஆண்டுக்குள் ஒரு வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கான துணைத் திட்டங்களை வகுக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

கர்நாடகாவில் விஜயநகரில் அவர் நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது; 2047ம் ஆண்டுக்குள் நாம் உண்மையாகவே ஒரு வளமான இந்தியாவை உருவாக்க வேண்டும். விஜயநகரப் பேரரசும் அதற்காகவே பாடுபட்டது. பேரரசு செழிப்பாக இருக்கும்போது, மக்களும் மகிழ்ச்சியாகவும் வளமாகவும் இருப்பார்கள். இதுவே நான் இங்கிருந்து எடுத்துச் செல்லும் செய்தியாகும்.

என்னுடன் வந்த அதிகாரிகளிடம், விஜயநகர பேரரசின் செழிப்பு, நல்லெண்ணம் ஆகியவற்றை எடுத்துச் செல்வதோடு மட்டுமல்லாமல், இங்கு ஒரு மரக்கன்றை நட்டு ஒரு சிறிய தடம் பதிக்க வேண்டும் என்று நான் கூற விரும்பினேன். குறிப்பாக விஜயநகரின் வறட்சி பாதித்த பகுதிகளில் இதைச் செய்ய வேண்டும். நான் இதற்கு முன்பு குருல்கிக்குச் சென்றிருக்கிறேன், அங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை நான் அறிவேன்.

முழு அமைச்சகமும், என்னுடன் வந்த 120 அதிகாரிகளும் விஜயநகரத்தில் தலா ஒரு மரக்கன்றை நட ஒப்புக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

நாங்கள் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து பங்கேற்கவும், நிலையான வாழ்க்கையை ஊக்குவிக்கவும் இந்த முயற்சியை எடுக்கிறோம். மேலும் இந்த மாவட்டத்தை பசுமையாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் மாற்ற விரும்புகிறோம். இவ்வாறு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

# த.வெ.க. சார்பில் இன்று விஜய் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா

## கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய சீட்டு உள்ளவர்களுக்கு மட்டுமே அனுமதி

**சென்னை, டிச. 22-**

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள போர் பாயிண்ட்ஸ் பை ஷெரட்டன் ஓட்டலில் இன்று (திங்கள்கிழமை) கிறிஸ்துமஸ் விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் த.வெ.க. தலைவர் விஜய் கலந்து கொண்டு பேசுகிறார். இதில் கட்சியின் முக்கிய நிர்வாகிகளும் பங்கேற்கிறார்கள்.



இந்த விழாவில் கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய அனுமதிச் சீட்டு உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்று த.வெ.க. பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

மனிதநேய நல்லிணக்க மாண்பைப் போற்றும் விதமாக, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் கலந்து கொள்ளும் சமத்துவக் கிறிஸ்துமஸ் விழா, இன்று (22.12.2025, திங்கள்கிழமை) காலை 10.30 மணிக்கு, மாமல்லபுரம் போர் பாயிண்ட்ஸ் பை ஷெரட்டன் ஓட்டலில் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் சகோதர சகோதரிகளுக்கு கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளதால் அவர்கள் மட்டுமே கலந்து கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பொங்கல் பரிசுத்தொகுப்பை முதல்வர் விரைவில் அறிவிப்பார்

## செந்தில்பாலாஜி தகவல்

**கோவை, டிச. 22-**

பொங்கல் பரிசுத்தொகுப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார் என்று தி.மு.க. முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவையில் முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- பழைய அரசியல் கட்சிகள் புதிய அரசியல் கட்சிகள் என எதுவாக இருந்தாலும் தி.மு.க.வை விமர்சனம் செய்யாமல் அரசியலில் இருக்க முடியாத ஒரு சூழல் தமிழகத்தில் இருக்கிறது. தி.மு.க.வை விமர்சனம் செய்தால்தான் அவர்கள் அரசியல் களத்தில் இருக்க முடியும் என்ற சூழல் உள்ளது. அ.தி.மு.க.வை கேட்டால் எங்களுக்கும், தி.மு.க.வுக்கும் தான் போட்டி என்பார்கள்.

புதிதாக வந்தவர்களை கேட்டால் எங்களுக்கும் தி.மு.க.வுக்கும் தான் போட்டி என்று சொல்வார்கள். உண்மையான மக்கள் ஆதரவை பெற்ற ஒரு இயக்கமாக தி.மு.க. இருக்கிறது. நாங்கள் யாரையும் போட்டியாளராக பார்க்கவில்லை. மக்கள் இயக்கமாக இருக்கிறோம். யாரையும் குறைவாக நாங்கள் சொல்லவில்லை. பொங்கல் பரிசுத்தொகுப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார்.

வருகிற சட்டமன்ற தேர்தலில் கோவை தொகுதியில் நான் போட்டியிடப் போவதாக சமூகவலைத்தளங்களில் வெளியாகி உள்ளது. கோவை தொகுதி நல்ல தொகுதி. நல்ல மக்கள். என் மீது பாசத்தை வைக்கிறார்கள். சமூக வலைதளங்களில் யாரோ ஒருவர் பேசுவதை நாம் பொருட்டாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தமிழக வளர்ச்சியில் பா.ஜனதாவுக்கு அக்கறை இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### மேற்கு வங்க மாநிலத்தில்

# மாநில வேலை உறுதி திட்டத்துக்கு காந்தியின் பெயரை சூட்டிய மம்தா

**கொல்கத்தா, டிச். 22-**

மேற்கு வங்க மாநிலத்தில் மாநில வேலை உறுதி திட்டத்துக்கு மகாத்மா காந்தியின் பெயர் அம்மாநில முதல்வர் மம்தா பானார்ஜி சூட்டியுள்ளார்.

மத்திய அரசு நிதி வழங்காத நிலையில், மேற்கு வங்க அரசு தனது சொந்த நிதியைக் கொண்டு 2024-இல் 'கர்மஸ்ரீ' திட்டத்தைத் தொடங்கியது. மத்திய அரசு நிதி வழங்காவிட்டாலும், எங்கள் சொந்த நிதியில் மக்களுக்கு வேலை வழங்குவோம். நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்ல மம்தா பேசினார். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, மாநில அரசின் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமான 'கர்மஸ்ரீ' க்கு மகாத்மா காந்தியின் பெயரைச் சூட்டப்போவதாக அறிவித்துள்ளார்.

மத்திய அரசு தனது தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிவிட்டு, அதற்கு "விபி ஜி ராம் ஜி" எனப் பெயர் மாற்றியுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக மம்தா பானர்ஜி இந்த முடிவை எடுத்துள்ளார்.

இதுகுறித்து பேசிய மம்தா, "தேசியத் தலைவர்களுக்குச் சில கட்சிகள் மரியாதை செலுத்தத் தவறினால், நாங்கள் அதைச் செய்வோம். தேசத் தந்தையின் பெயரையே நீக்குவது மிகுந்த அவமானமாக இருக்கிறது" என்று தெரிவித்தார். முன்னதாக முறைகேடுகளைக் காரணம் காட்டி 2022-ஆம் ஆண்டு முதல் மேற்கு வங்கத்திற்கான ஊரக வேலை வாய்ப்பு திட்ட நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனால் சுமார் 58 லட்சம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய 6,919 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது.

மத்திய அரசு நிதி வழங்காத நிலையில், மேற்கு வங்க அரசு தனது சொந்த நிதியைக் கொண்டு 2024-இல் 'கர்மஸ்ரீ' திட்டத்தைத் தொடங்கியது. இது கிராமப்புற குடும்பங்களுக்கு ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 50 நாட்கள் வேலைவாய்ப்பை உறுதி செய்கிறது.

மத்திய அரசு நிதி வழங்காவிட்டாலும், எங்கள் சொந்த நிதியில் மக்களுக்கு வேலை வழங்குவோம். நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்ல மம்தா பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே நேற்று மேற்கு வங்கம் வந்த பிரதமர் மோடி, மேற்கு வங்கத்தில் காட்டு ராஜ்ஜியம் விரைவில் அகற்றப்படும் என பொதுக்கூட்டத்தில் சூளுரைத்துச் சென்றார்.

# தற்போது வரை தேசிய ஜனநாயக கூட்டணியில்தான் தொடர்கிறோம்

## புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தகவல்

**புதுச்சேரி, டிச. 22-**

தேசிய ஜனநாயக கூட்டணியில் தற்போதுவரை தொடர்கிறோம் என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ளார்.



புதுச்சேரியில் தற்போது பா.ஜ.க., என்.ஆர்.எஸ்.காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனிடையே அடுத்தாண்டு வரவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் இக்கூட்டணி தொடருமா? என்ற கேள்வி நீண்ட நாட்களாக எழுந்து வருகிறது.

இந்நிலையில் கூட்டணியை உறுதிப்படுத்த, தக்க வைத்துக்கொள்ள, கூடுதல் இடங்கள் கோர பா.ஜ.க. திட்டமிட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக பா.ஜ.க.வின் புதிய தேசிய செயல் தலைவர் நிதின் நபின் இன்று முதல்வர் ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து கூட்டணி தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் ரங்கசாமி, "தேசிய ஜனநாயக கூட்டணியில் தற்போது வரை தொடர்கிறோம். புதுச்சேரி வளர்ச்சி குறித்து பா.ஜ.க. செயல் தலைவர் நிதின் நபீனுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம்" என தெரிவித்தார். முன்னதாக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, புதுச்சேரி பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் சுரானா, சட்டப்பேரவைத் தலைவர் செல்வம், பா.ஜ.க. மாநில தலைவர் ராமலிங்கம் ஆகியோர் அப்பா பைத்திய சுவாமி கோயிலில் முதலமைச்சருடன் வழிபட்டனர்.

### மகாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தல்:

# பா.ஜ.க அமோக வெற்றி

**மும்பை, டிச. 22-**

மகாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியது. இதில் பா.ஜ.க கூட்டணி பெரும்பாலான இடங்களில் வெற்றிப்பெற்றுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் 2 கட்டங்களாக உள்ளாட்சி தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்தது. 246 நகராட்சி, 42 நகர பஞ்சாயத்து ஆகிய 288 உள்ளாட்சிகளுக்கான வாக்குப்பதிவு நடந்தது. இதில் பல இடங்களில் கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டன. சில இடங்களில் பா.ஜ.க.-சிவசேனா, காங்கிரஸ்- சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ் கூட்டணி அமைத்து போட்டியிட்டன.

பல்வேறு அரசியல் பரபரப்புக்கு இடையே மராட்டிய உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியது. இதில் பா.ஜ.க கூட்டணி பெரும்பாலான இடங்களில் வெற்றிப்பெற்றுள்ளது. பா.ஜ.க கூட்டணி 192 இடங்களில் வெற்றிப்பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான காங்கிரஸ் கூட்டணி 48 இடங்களில் வெற்றிப்பெற்றுள்ளது. மொத்தம் உள்ள 42 நகர பஞ்சாயத்துகளில் பா.ஜனதா 22 இடங்களில் வெற்றிப் பெற்ள்ளது. சிவசேனா-8, காங்கிரஸ்-4, உத்தவ் தாக்கரே சிவசேனா-3, தேசியவாத காங்கிரஸ்-3, மற்றவை-2 இடங்களில் வெற்றிப் பெற்ள்ளது.

### சட்டசபை தேர்தலை முன்னிட்டு

# டிச. 29-ல் பா.ம.க. சிறப்பு பொதுக்குழுக் கூட்டம்

**சென்னை, டிச. 22-**

வரும் டிச. 29-ல் நடைபெறவுள்ள பா.ம.க. சிறப்பு பொதுக்குழுக் கூட்டத்துக்கு அந்த கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அழைப்பு விடுத்துள்ளார். செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது குறித்து ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: 2026ஐ வரவேற்போம். புத்தாண்டு மாநில சிறப்பு செயற்குழு கூட்டமும் மாநில சிறப்பு பொதுக்குழு கூட்டமும் வருகின்ற டிச. 29 ஆம் தேதி திங்கள்கிழமை சேலம் 5 ரோடு ரத்தினவேல் ஜெயக்குமார் திருமண அரங்கில் நடைபெற உள்ளது.

புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியில் பா.ம.க., வ.ச., ச.மு.ச. உள்ளிட்ட அனைத்து அமைப்புகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், மாநகரப் பகுதி நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன். கட்சி வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்தும் 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்தும் ஆலோசிக்கப்படும். மாநில செயற்குழு கூட்டம் டிச. 29 ஆம் தேதி காலை 10.00 முதல் 11.30 மணி வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாநில பொதுக்குழு கூட்டம் 11.40 மணி முதல் நடைபெறும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அமெரிக்காவின்

# 'புளூ பேர்ட்' செயற்கைக்கோள் டிச. 24-ல் விண்ணில் பாய்கிறது

**பெங்களூரு, டிச. 22-**

அமெரிக்காவின் 'புளூ பேர்ட்' செயற்கைக்கோள் டிசம்பர் 24ம் தேதி காலை 8:54 மணிக்கு விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.



அமெரிக்காவை சேர்ந்த ஏ.எஸ்.டி., நிறுவனம், தகவல் தொடர்பு சேவைக்காக, 6,500 கிலோ எடையில், 'புளூ பேர்ட்' செயற்கைக்கோளை உருவாக்கி உள்ளது. இது, தொலைதூர கிராமங்களுக்கு, மொபைல் போன், அதிவேக இணையதள சேவைகளை வழங்க உதவும்.

இந்த செயற்கைக்கோளை, 'இஸ்ரோ' விண்ணில் செலுத்த உள்ளது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில், இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மைய ஏவுதளத்தில் இருந்து, வரும், டிசம்பர் 24ம் தேதி காலை, 8:54 மணிக்கு, எல்.வி.எம்., 3 ராக்கெட் வாயிலாக, 'புளூ பேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் 15, 21ம் தேதிகளில், 'புளூபேர்ட்' செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட இருந்த நிலையில், அத்திட்டம் ஒத்தி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. "கிட்டத்தட்ட ஆறு பில்லியன் மொபைல் சந்தாதாரர்கள் எதிர்கொள்ளும் டவர் பிரச்சினை நீக்குவதற்கும், பில்லியன் கணக்கானவர்களுக்கு பிராட்பேண்டைக் கொண்டு வருவதற்கும் நாங்கள் பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்று இஸ்ரோ நிறுவனம் தனது வலைத்தளத்தில் தெரிவித்துள்ளது.

இஸ்ரோவால் சமீபத்தில் ஏவப்பட்ட LVM3-M5/CMS-03 பயணத்தில் தகவல் தொடர்பு, செயற்கைக்கோள் நவம்பர் 2, 2025 அன்று வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

# நாட்டில் போலி பல்கலைக்கழகங்கள் எண்ணிக்கை 25 ஆக உயர்வு - யூ.ஜி.சி.

**புதுடெல்லி, டிச. 22-**

இந்தியாவில் போலிப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில் பல்கலைக்கழக மானியக் குழு தற்போது மேலும் 3 கல்வி நிறுவனங்களைப் போலிப் பட்டியலிட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் உள்ள மொத்த போலிப் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.

டெல்லியில் உள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் சொல்யூஷன்ஸ், கர்நாடகாவில் உள்ள சர்வ பாரதிய சிக்ஷா பீடம் மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள நேஷனல் பேக்வார்ட் கிருஷி வித்யாபீடம் ஆகிய கல்வி நிறுவனங்கள் அங்கீகாரம் பெறாத போலியான நிறுவனங்கள் என்று யூ.ஜி.சி. தெரிவித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் இளங்கலை, முதுகலை மற்றும் டிப்ளோமா சான்றிதழ்கள் எதற்கும் அங்கீகாரம் கிடையாது. இந்தச் சான்றிதழ்களைக் கொண்டு மேல் படிப்பிற்கோ அல்லது வேலை வாய்ப்புக்கோ விண்ணப்பிக்க முடியாது. மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கு முன்னால், அந்த நிறுவனம் யூ.ஜி.சி.-ஆல் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் சரிபார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போது டெல்லியில் தான் அதிகப்படியாக 10 போலிப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. உத்தரப் பிரதேசத்தில் 4, கேரளாவில் 2, மகாராஷ்டிரா மற்றும் புதுச்சேரியில் தலா ஒன்று என இந்தப் பட்டியல் நீள்கிறது.

**வாக்களிப்பது நமது கடமை**

### பொருநை அருங்காட்சியகத்தை

# பார்வையிட பொதுமக்களுக்கு வரும் 23-ம் தேதி முதல் அனுமதி

**நெல்லை, டிச. 22-**

பொருநை அருங்காட்சியகத்தை டிச.23 முதல் பொதுமக்கள் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெல்லை சீமைக்கும், பொருநை நாகரிகத்துக்கும் புகழ் சேர்க்கும் வகையில் ரூ.67.25 கோடியில் அமைக்கப்பட்டுள்ள பொருநை அருங்காட்சியகத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை இரவு திறந்து வைத்தார். திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையை அடுத்த ரெட்டியார்பட்டி மலைப் பகுதியில் 13 ஏக்கர் பரப்பில் 54,296 சதுர அடியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு மின்னொளியில் மிளிர்ந்த பொருநை அருங்காட்சியகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து அருங்காட்சியகத்தின் வாயிலில் வன்னி மரத்தை நடவு செய்தார். அதன்பிறகு அருங்காட்சியகத்தின் அறிமுக கூடத்தை முதல்வர் திறந்து வைத்து பார்வையிட்டார். அப்போது அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் குறித்து முதல்வருக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கினார். பின்னர் கட்டடத்தின் மேல் மாடிக்கு சென்று அவர் பார்வையிட்டார்.

இது தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் இரா சுகுமார் கூறுகையில் 'பொருநை அருங்காட்சியகத்தை பார்வையிடுவதற்கு செவ்வாய்க்கிழமை (டிச.23) முதல் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்கள். இதையொட்டி, பொதுமக்கள் சென்று வர வசதியாக அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் பேருந்துகள் இயக்கப்படும்' என்றார். இந்த நிலையில், பொருநை அருங்காட்சியகத்தை செவ்வாய்கிழமை முதல் பொதுமக்கள் பார்வையிடலாம்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



100 நாள் வேலை திட்டத்துக்கு தற்போது வைத்துள்ள பெயர் காந்தியை விட பொருத்தமான பெயரா?. பெயரை நீக்கியதன் மூலம் 77 ஆண்டுகளுக்குப் பின் மகாத்மா காந்தி மீண்டும் கொல்லப் பட்டுள்ளார். இந்த திட்டத்திற்கு வைத்துள்ள வாயில் நுழையாத பெயர் இந்தியா? ஆங்கிலமா?.

- ப.சிதம்பரம்



கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்கும் முதல்வரை பாராட்டுகிறோம். ஆனால், அவர் தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, தைப்பூசம் போன்ற இந்துக்களின் பண்டிகைகளில் பங்கேற்பதில்லை. குறைந்தபட்சம் இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்து கூட சொல்வதில்லை. இது மதங்களுக்கு இடையிலான பாகுபாடு இல்லையா?.

- வானதி சீனிவாசன்



ஊரக வளர்ச்சியின் அவசியத்தையும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஓ.பன்னீர்செல்வம்




பல லட்சம் விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் போது 10 ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டும் மின் இணைப்பு வழங்குவதாக அறிவித்துவிட்டு இத்திட்டத்தை தமிழக அரசு கைவிட்டது. எனவே, அவர்கள் வாழ்வாதாரம் காக்கும் வகையில் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க மேலும் கால அவகாசம் அளிக்க வேண்டும்.

- ஜி.கே.வாசன்

### அழகர்கோவில் கள்ளழகர் கோவிலில்

# மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு விழாவை முன்னிட்டு பகல் பத்து விழா

## திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்



மேலூர்,டிச 22-

அழகர்கோவில் கள்ளழகர் திருக்கோவிலில் மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பு விழாவை முன்னிட்டு பகல் பத்து விழா தொடங்கியது. வருகிற டிசம்பர் 30 அதிகாலை சொர்க்கவாசல் திறப்பு விழா நடைபெறுகிறது.

மதுரை மாவட்டம், அழகர் கோவில் கள்ளழகர் திருக்கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு நடைபெறும் பகல் பத்து இராப்பத்து நிகழ்ச்சியில் பகல் பத்துவின் முதல் நாள் நிகழ்ச்சி வெகு விமர்சையாக நேற்று முன்தினம் நடைபெற்றது. சொர்க்கவாசல் திறப்புக்கு முதல் 10 நாட்கள் பகல்பத்து எனவும் சொர்க்க வாசல் திறப்புக்கு அடுத்து வரும் 10 நாட்கள் இராப் பத்து எனவும் அழைக்கப்படுகின்றது.

நேற்று கோவிலில் உற்சவர் அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் என்ற கள்ளழகர் மேளதாளங்கள் முழங்க தீவட்டி பரிவாரங்களுடன் புறப்பாடாகி, கோவில் யானை சுந்தரவள்ளி முன்னே செல்ல கோவிலின் உட்பிரகாரத்தை சுற்றி வந்து கருடாழ்வார் சன்னதி முன்பாக உள்ள மண்டபத்தில் எழுந்தருளினார்.

ஏகாந்த சேவை அலங்காரத்தில் எழுந்தருளிய பெருமாளுக்கு வண்ண மலர்கள் கொண்டு பூஜைகளும் தீபாராதனைகளும் நடைபெற்றன. தொடர்ந்து பட்டர்கள் பாசுரங்கள் படிக்க பெரியாழ்வார் முன்பாக மண்டபத்தில் வீற்றிருந்த சுந்தரராஜ பெருமாள் ஏகாந்த சேவை அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பாசுரங்கள் தமிழில் பாடப்பட்டது. தொடர்ந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். வருகிற டிச.30 ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி விழாவின் முக்கிய நாளான அன்று அதிகாலை 5.30 மணிக்கு மேல் சொர்க்க வாசல் திறப்பு கோவிலில் நடைபெற உள்ளது.

### கொடைரோடு அருகே பள்ளபட்டி சிப்காட்டில்

# உலகத்தமிழ் வர்த்தக மையம் சார்பில் மாநில அளவிலான கலந்தாய்வுக்கூட்டம்

## பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்



வத்தலகுண்டு டிச.22-

உலகத் தமிழ் வர்த்தக மையத்தின் மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களும்,ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களும் Mad in Tamil nadu என்றே வெளியிடப்படும்,பள்ளபட்டி சிப்காட்டில் நடைபெற்ற உலகத் தமிழ் வர்த்தகமையம்கலந்தாய்வுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர்

திண்டுக்கல் மாவட்டம், கொடைரோடு அருகே உள்ள பள்ளபட்டி தொழிற் பூங்காவில் (சிப்காட்டில்) உலகத் தமிழ் வர்த்தக மையம் சார்பில் மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது,

கூட்டத்திற்கு உலகத் தமிழ் வர்த்தக மைய இயக்குநர் நாச்சிமுத்து தலைமை வகித்தார்,திண்டுக்கல் நாகா புட்ஸ் நிர்வாக இயக்குநர் கமலக்கண்ணன,திருவள்ளூர் பல்கலை துணைவேந்தர் ஆறுமுகம், மதுரை மண்டல வணிகர் சங்க தலைவர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,நிர்வாக இணை இயக்குநர் கனிமொழிமதி வரவேற்றார்,

கூட்டத்தில் உலகத் தமிழ் வர்த்தக மையம் சார்பில் யாதும் ஊரே யாவரும்கேளிர்என்றஅடைப்படையில் மத்திய,மாநில அரசுகளின் உதவியோடு சிறுகுறு புதிய இளம் ஏற்றுமதியாளர்களை, வணிகர்களை ஊக்குவிக்கும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு,தற்சார்புஉற்பத்தியாளர்களை ஊக்குவித்து தமிழகத்தில் உற்பத்திசெய்யப்படும்பொருட்களுக்கு (mad in Tamilnadu) என்றே ஏற்றுமதி செய்யப்படும்,அந்ததந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும்பொருட்களை உலக நாடுகள் அணைத்திற்கும் ஏற்றுமதி செய்ய வசதிகள் செய்து தரப்படும் இதன் மூலம் வருடத்திற்கு 1000 முதல் 2000 கோடி வரை வணிகம் செய்யப்படும் இதன் மூலம் சுமார் 10000 இளைஞர்களுக்கு சுயதொழில் வேலைவாய்புகள் ஏற்படுத்தப்படும்,மரபு சார்ந்த மருத்துவம்சார்ந்தஉணவுப் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கு உலக தமிழர்களிடம்கொண்டுசெல்லப்படும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றினர்,

மேலும் இந்த கூட்டத்தில் மாநில மண்டல அளவிலான வளரும் இளம் தொழில்பயிற்றுனர்கள்,வல்லுனர்கள், பல்வேறு தொழிற்சாலை நிர்வாகத்தினர், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், தன்னார்வளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இந்தியாவின் பெயிண்ட் மற்றும் பூச்சுகள் துறை 16.5 பில்லியன்

# அமெரிக்க டாலர் இலக்கை நோக்கி முன்னேறினாலும், போட்டி சவால்கள் தீவிரமடைகின்றன: ரூபிக்ஸ் தொழில்துறை ஆய்வு

சென்னை, டிச 22-

2024 ஆம் ஆண்டில் சுமார் 9.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பைக் கொண்டிருந்த இந்தியாவின் பெயிண்ட் மற்றும் பூச்சுகள் தொழில் (வண்ணப்பூச்சுகள் மற்றும் பூச்சுகள் தொழில்), 2030-ம் ஆண்டு வரை ஆண்டுக்கு 9.4 சதவீத வளர்ச்சி விகிதத்தில் முன்னேறி, அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 16.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளரக்கூடும் என ரூபிக்ஸ் தரவு அறிவியல் நிறுவனம் வெளியிட்டுள்ள சமீபத்திய தொழில்துறை ஆய்வு தெரிவிக்கிறது.

நீண்டகால தேவைக்கான அடிப்படை காரணிகள் வலுவாக இருந்தபோதிலும், 2025 நிதியாண்டு இந்தத் துறைக்கு ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. அதிகரிக்கும் போட்டி அழுத்தங்கள், லாப விகிதச் சுருக்கம் மற்றும் மதிப்புச் சங்கிலி முழுவதிலும் உள்ள கட்டமைப்பு சவால்கள் இக்காலகட்டத்தில் தெளிவாக வெளிப்பட்டன.

2025 நிதியாண்டு சந்தையின் முன்னணி நிறுவனங்களுக்குக் கூட சவாலான ஆண்டாக அமைந்தது. முக்கிய பெயிண்ட் உற்பத்தியாளர்கள், குறைந்த லாப விகிதங்கள், நகர்ப்புறங்களில் மந்தமான தேவை மற்றும் விலை அடிப்படையிலான கடும் போட்டியை எதிர்கொண்டனர். நுகர்வோர் குறைந்த விலை கொண்ட தயாரிப்புகளை நோக்கி நகர்ந்ததால், அதிக தள்ளுபடிகள் மற்றும் விற்பனையாளர் ஊக்கத்தொகைகள் லாபத்தைக் குறைத்தன.

கடந்த சில ஆண்டுகளில் கிராசிம் இண்டஸ்ட்ரீஸின் பிர்லா ஓபஸ், ஜேஎஸ்டபிள்யூ பெயிண்ட்ஸ், பிடிலைட் நிறுவனத்தின் ஹைஷா பெயிண்ட்ஸ் ஆகியவற்றின் நுழைவு, அதேபோல் ஜேஎஸ்டபிள்யூ பெயிண்ட்ஸ் அக்ஸோ நோபல் இந்தியாவை கையகப்படுத்துதல், ஆஸ்ட்ரல் ஜெம் பெயிண்ட்ஸை வாங்குதல் மற்றும் ஜேகே சிமென்ட் அக்ரோ பெயிண்ட்ஸை கையகப்படுத்துதல் போன்ற ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், துறையில் போட்டியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. அறிக்கை முடிவில், இந்திய பெயிண்ட் மற்றும் பூச்சுகள் தொழில் நீடித்த வளர்ச்சிக்கான நல்ல நிலையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

### நத்தம் அருகே

# வேளாண்மைத்துறை சார்பில் பள்ளி மாணவர்களுக்கான பயிற்சி முகாம்




நத்தம், டிச.22-

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வேளாண்மைத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் மாணவ மாணவிகளுக்கான பட்டறிவு பயணம் பயிற்சி முகாம் நடந்தது. இதற்கு வேளாண்மை இணை இயக்குநர் ரமேஷ் தலைமை தாங்கினார்.

இதில் வேளாண்மைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு ராம்சன்ஸ் மெட்ரிக் மேல்நிலைபள்ளியில் பயிலும் 11, மற்றும் 12-ம் வகுப்பு பள்ளி மாணவ,மாணவிகளை அழைத்து சென்று வேளாண்மை மூலம் பயிரிடப்படும் பண்ணைகளை பார்வையிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் பட்டு உற்பத்திகள் குறித்தும், அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கி கூறி பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமில் வேளாண்மைதுறை அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் கே.டி.எம். 160 டியூக் ஆன்-டிராக் டெஸ்ட் ரைட் அனுபவம்

சேலம், டிச 22-

பிரீமியம் மோட்டார் சைக்கிள் பிராண்டான கேடிஎம், ஆரஞ்ச் எக்ஸ்பி-160 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது கேடிஎம் 160 டியூக்இன் உண்மையான செயல்திறனை, வருங்கால வாடிக்கையாளர்களும் ரைடிங் ஆர்வலர்களும் உண்மையான டிராக்கில் அனுபவிக்க உருவாக்கப்பட்ட, முதன்முறையான ஆன்-டிராக் டெஸ்ட் ரைட் அனுபவம் ஆகும். கேடிஎம்நிபுணர்களின் வழிகாட்டுதலுடன், பாதுகாப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் டியூக் 160-ஐ சவாரி செய்யும் வாய்ப்பை இது வழங்குகிறது.நவம்பர் 29, 2025 அன்று புனேவில் தொடங்கப்பட்ட ஆரஞ்ச் எக்ஸ்பி-160, இந்தியா முழுவதும் 40+ நகரங்களுக்கு விரிவடைகிறது, அதன் ஒரு பகுதியாக நாளை சேலம் நகரத்தில் நடைபெறுகிறது.

முக்கிய நகரங்களின் கோ-கார்ட் டிராக்குகளில் நடத்தப்படும் இந்த அனுபவம், கார்னரிங், பிரேக்கிங், த்ரோட்டில் கட்டுப்பாடு போன்ற ரைடு & லெர்ன் அமர்வுகள் மற்றும் திறன் சார்ந்த சவால்கள் மூலம் டியூக்160-ன் ரேசிங் ஆனடாமியை வெளிப்படுத்துகிறது. கேடிஎம் 160 டியூக், 164.2சிசி திரவ-குளிரூட்டப்பட்ட எஞ்சின் மூலம் 19 பிஎஸ் பவர் மற்றும் 15.5 என்எம் டார்க் வழங்குகிறது.

இது குறித்து பஜாஜ் ஆட்டோ லிமிடெட் நிறுவனத்தின் புரோ-பைக்கிங் தலைவர் மாணிக் நங்கியா கூறுகையில், ஆரஞ்ச் எக்ஸ்பி-160 கேடிஎம்அனுபவத்தை பெறுவதற்கான முற்றிலும் புதிய வழி; இது இந்தியாவின் அடுத்த தலைமுறை ரைடர்களுக்கு கேடிஎம்செயல்திறன் நெறிமுறைகளை நேரடியாக கொண்டு செல்கிறது என்று கூறினார்.

# பிஎன்பி மெட்லைப் - பாலிசிபஜார் இணைந்து அறிமுகப்படுத்தும் புதிய டிஜிபுரொடெக்ட் டேர்ம் இன்சூரன்ஸ்

சென்னை, டிச 22-

இந்தியாவின் முன்னணி ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான பிஎன்பி மெட்லைஃப் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (பிஎன்பி மெட்லைஃப்), பாலிசிபஜாருடன் இணைந்து, சம்பளதாரர்களுக்கான பிஎன்பி மெட்லைஃப் டிஜிபுரொடெக்ட் டேர்ம் பிளான் (யூஐஎன்-117என்141வி01) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.முழுமையாக டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் இந்த இன்சூரன்ஸ், ஒரு தனிநபர், நான்-லிங்கிடு, நான்-பார்ட்டிசிபேட்டிங் மற்றும் சுத்தமான இன்சூரன்ஸ் திட்டமாகும். இதன் டிஜிட்டல் வசதிகள், காப்பீட்டைப் பெறுவதை எளிதாக்குவது மட்டுமல்லாமல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் உள்ள சம்பளம் பெறும் ஊழியர்களுக்கும் ஆயுள் காப்பீட்டின் வரம்பை விரிவுபடுத்துகிறது. இதில், முதல் பிரீமியத்தில் முதல் ஆண்டுக்கு 21% வரை தள்ளுபடி உள்ளிட்ட பிரத்யேகப் பலன்கள் இடம் பெற்றுள்ளன. இது பாலிசிதாரர்களுக்கான தொடக்கச் செலவை கணிசமாகக் குறைக்கிறது.

இது குறித்து பிஎன்பி மெட்லைஃப் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி சமீர் பன்சல் கூறுகையில்,இந்தியாவில் 91% ஆயுள் பாதுகாப்பு இடைவெளி தொடர்ந்து நீடித்து வருகிறது. அதாவது, நிதிப் பாதுகாப்பு தேவைப்படும் ஒவ்வொரு குடும்பங்களிலும் ரூ.100-க்கு வெறும் ரூ.9 மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளது.இந்த இடைவெளி சம்பளம் பெறும் பிரிவினர் இடையே இன்னும் அதிகமாக உள்ளது. இவர்கள் தங்களைச் சார்ந்திருப்பவர்களை ஆதரிப்பது, குழந்தைகளின் கல்விக்கு நிதியளிப்பது முதல் வீடு வாங்குவது மற்றும் நீண்ட கால ஓய்வூதியத்திற்குத் திட்டமிடுவது வரை அதிகரித்து வரும் நிதிப் பொறுப்புகளை எதிர்கொள்கின்றனர். சம்பளம் பெறும் தனிநபர்கள் தங்கள் கனவுகளை உருவாக்கும்போது தங்கள் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, நாங்கள் பிஎன்பி மெட்லைஃப் டிஜிபுரொடெக்ட் டெர்ம் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம் என்று கூறினார்.

# பிரிட்டானியா மில்க் பிக்கிஸ்: ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட் வெளியீடு

தஞ்சாவூர், டிச 22-

அடேங்கப்பா கதைகள் 2.0 முன்முயற்சியின் வெற்றியுடன், பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் அதன் பேக்குகளில் புதிய ஸ்பெஷல் எடிஷன் சூப்பர் ஸ்டார் பிஸ்கட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய பிஸ்கட், தமிழ்நாட்டுடன் பிரிட்டானியாவின் நீண்டகால பிணைப்பை மேலும் ஆழப்படுத்துவதோடு, தமிழின் பெருமை மற்றும் கதைசொல்லும் கலாச்சாரத்தை கொண்டாடுகிறது. நுகர்வோர் கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து சிறப்பு கதைகளை அறிந்து கொள்ளலாம்; பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் இதன் மூலம் பரிசுகள் மற்றும் ஹாங்காங்கிற்கு பயணவாய்ப்பையும் பெறலாம்.டேலண்ட்டட் நிறுவனம் கருத்தாக்கிய இந்த முயற்சி, அடேங்கப்பா கதைகள் 2.0-இன் மையக்கருவாக உள்ளது.

ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு (ஜென்ஏஐ) மூலம், அன்றாட பொருட்கள் மூலம் கதைகளில் கற்பனையை ஊக்குவித்து, குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு புதிய அனுபவங்களை வழங்குகிறது. ஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் இந்த அனுபவத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்று, புதுமை, விளையாட்டு மற்றும் படைப்பாற்றலை தமிழகம் முழுவதும் வீடுகளில் கொண்டு வருகிறது. இது குறித்து பிரிட்டானியா நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவின் பொது மேலாளர் சித்தார்த் குப்தா கூறுகையில், பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் எப்போதும் தமிழக குடும்பங்களின் இதயங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்த ஸ்பெஷல் எடிஷன் பிஸ்கட் மூலம் மக்கள் மகிழ்ச்சியுடனும் கற்பனைமிக்க கதைகளுடன் இணைந்த அனுபவத்தை அனுபவிப்பார்கள். தமிழ்நாட்டுடன் நாங்கள் கொண்ட அழகிய பந்தத்தை இது மேலும் வலுப்படுத்துகிறது என்று கூறினார்.

### ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி

# தொப்பம்பட்டியில் 461 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள்

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்



ஒட்டன்சத்திரம். டிச. 22-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டி வேல் மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டங்களை சேர்ந்த 461 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கிஉணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு எல்லோருக்கும் எல்லாமஎன்ற உன்னத நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் பழனி வட்டங்களை சேர்ந்த புஷ்பத்தூர் ஊராட்சியில் 206 பயனாளிகளுக்கும், ராஜாம்பட்டி ஊராட்சியில் 173 பயனாளிகளுக்கும் மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டங்களை சேர்ந்த சத்திரப்பட்டி ஊராட்சியில் 82 பயனாளிகளுக்கும் என மொத்தம் 461 பயனாளிகளுக்கு ரூ.6.11 கோடி மதிப்பீட்டில் உபரி நிலத்தில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, முதன்மை செயலர்கள், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அவர்கள் ஆகியோர் முழு ஒத்துழைப்புடன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் , வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர்கள் உட்பட பல்வேறு அரசு அலுவலர்களின் ஒத்துழைப்புடன் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு புஷ்பத்தூர், ராஜாம்பட்டி, சத்திரப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கு 461 பயனாளிகளுக்கு உபரி நிலத்தில் இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய எந்த திட்டமாக இருந்தாலும் உடனே ஒப்புதல் கொடுத்து செயல்படுத்தி வருகிறார்கள்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியும் அவர்களின் வாழ்க்கை தரம் உயர்த்த வேண்டும் என்பதற்காக ஏழை, நடுத்தர மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை பூர்த்தி செய்யும் விதமாக "எல்லோருக்கும் எல்லாம்" என்ற வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்தும் விதமாக என்றென்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும், என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம். மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, கோட்டாட்சியர் கண்ணன், வட்டாட்சியர்கள் சஞ்சை காந்தி, பிரசன்னா, ஒட்டன்சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்பிரபு பாண்டியன்,தாஹிரா, மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி, தர்மராஜன், பொன்ராஜ், கீரனூர் பேரூராட்சி தலைவர் கருப்புசாமி துணைத்தலைவர் ஹாஜி அப்துல் சுக்கூர் உள்ளிட்ட துரை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கிறிஸ்தவ சிறுபான்மையின மக்களை தி.மு.க. ஓட்டுக்காக பயன்படுத்துகிறது

## மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் குற்றச்சாட்டு



மதுரை, டிச. 22-

கிறிஸ்தவ சிறுபான்மையின மக்களை தி.மு.க. ஓட்டுக்காக பயன்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள அ.தி.மு.க. மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன், அ.தி.மு.க. கிறிஸ்தவர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து கிறிஸ்மஸ் விழாவையொட்டி நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கழக மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் பங்கேற்று கூறியதாவது-

2026 ஆண்டில் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக எடப்பாடியார் வர வேண்டும் என்று கிறிஸ்தவ மக்கள் இங்கே விசேஷ பிரார்த்தனை செய்தனர். நிச்சியம் நடைபெறும் ஏனென்றால் மக்கள் தீர்ப்பே இறைவன் தீர்ப்பாகும்.

சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரண் எடப்பாடியார் தான். குறிப்பாக கிறிஸ்தவ மக்கள் ஜெருசலம் செல்ல முதன் முதலில் நிதி உதவியை வழங்கியது அம்மா. அதை தொடர்ந்து மக்களின் கோரிக்கையை ஏற்று அதை உயர்த்தி தந்ததவர் எடப்பாடியார்.

அதேபோல அன்னை தெரசா பெயரில் பல்கலைக் கழக அமைத்து தந்தது அம்மாவின் அரசாகும். அதேபோல எடப்பாடியார் ஆட்சியில் கிறிஸ்தவ ஆலயங்கள் சீரமைக்க பல்வேறு நிதிகள் வழங்கப்பட்டது. என்றைக்குமே சிறுபான்மையின மக்களை ஓட்டுக்காக அ.தி.மு.க. பயன்படுத்தியது கிடையாது ஆனால் தி.மு.க. தான் ஓட்டுக்காக கிறிஸ்துவ மக்களை பயன்படுத்துவார்கள்.

இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த நான்கரை ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடனை வாங்கியுள்ளனர். இதனால் தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 4.60 லட்சம் கடன் சுமை ஏற்பட்டுள்ளது.

இதே 2021 ஆண்டில் தி.மு.க. ஆட்சி பொறுப்பு ஏற்கும் போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் கடன் சுமை 2.61 லட்சம் தான் இருந்தது தற்போது இரண்டு லட்சம் அதிகரித்துள்ளது. இன்றைக்கு தமிழகத்தில் மக்கள் சேவையால் மக்களின் இதயங்களில் நிற்பவர் யார் என்றால் எடப்பாடியார் தான். நடைபெறும் 2026 சட்டமன்ற தேர்தலில் ஸ்டாலின் தலைமையில் ஆட்சியா அல்லது எடப்பாடியார் தலைமையில் ஆட்சியா? என்று எடை போட்டு 2026 தேர்தலில் எடப்பாடியார் தான் வேண்டும் என்று மக்கள் முடிவு எடுப்பார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்ப்புதல்வன் மற்றும் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் பயனடைந்த

# திண்டுக்கல் மாவட்ட மாணவ, மாணவியர்கள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நெஞ்சார்ந்த நன்றி



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செல்படுத்தி வருகிறார். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பின்னர் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் சிறப்பான ஆட்சி நடத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதல்வர் , கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில், பெண் கல்வியை போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தை தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், நல்ல குடிமக்களை பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தை சார்ந்தவராகவும் உருவாக பல்வேறு உன்னத திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் வகையில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ் அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வியில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு (Certificate Course), பட்டயப் படிப்பு (Diploma/ITI./D.T Ed., Courses), இளங்கலைப் பட்டம் (Bacholor Degree - B.A., B.Sc., B.Com., B.B.A. B.C.A., and all Arts & Science, Fine Arts Courses), தொழில் சார்ந்த படிப்பு (B.E. B.Tech., M.B.B.S., B.D.S. B.Sc., (Agri), B.V.Sc., B.Fsc., B.L. etc..) மற்றும் பாரா மெடிக்கல் படிப்பு (Nursing. Pharmacy. Medical Lab Technology. Physiotherapy etc.) ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/- வீதம் உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தினை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 05.09.2022 அன்று சென்னை, பாரதி மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

தொடர்ந்து, அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் "தமிழ்ப்புதல்வன்" திட்டம் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 09.08.2024 அன்று கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரியில் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், "புதுமைப் பெண்" திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அரசு பள்ளிகளில் படித்துள்ள மாணவிகளுக்கு மட்டுமல்லாமல், அரசு உதவிபெறும் பள்ளியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்று உயர் கல்வியில் சேறும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் "புதுமைப்பெண்" திட்டத்தின் விரிவாக்கத்தினை தமிழ்நாடு முதல்வர் அவர்களால் தூத்துக்குடியில் 30.12.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

உயர்கல்வி மாணவர்களின் கனவுகளை நனவாக்க உதவும் என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்ற அனைத்து மாணவர்களும் கலை மற்றும் அறிவியல், பண்பாடு, தொழில்நுட்பம், விவசாயம், செவிலியர் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகள் சட்டம், பொறியியல், தொழிற்கல்வி சார்ந்த பட்டம் மற்றும் பட்டயப் படிப்புகளில் இந்திய அரசு. தமிழ்நாடு அரசு, பல்கலைக் கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000 ஊக்கத் தொகையை முழுமையாக அப்படிப்பினை படிக்கும் வரை வழங்கப்படுகிறது.

கடந்த நான்கரை ஆண்டுகளில் திண்டுக்கல் மாவட்டத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் "புதுமைப்பெண்" திட்டத்தின்கீழ் 11,858 மாணவிகளும், "தமிழ்புதல்வன்" திட்டத்தின்கீழ் 8,984 மாணவர்களும் என மொத்தம் 20,842 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். "புதுமைப் பெண்" திட்டத்தின்கீழ் பயனடைந்து வரும் திண்டுக்கல் எம்.வி.எம் முத்தையா மகளிர் கலைக்கல்லூரியில் பி.ஏ தமிழ் பிரிவில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவி செல்வி ஆர்த்தி தெரிவித்தாவது.

என் பெயர் ஆர்த்தி. நான் கொண்டம நாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். எங்கள் குடும்பத்தில் மொத்தம் 3 குழந்தைகள். நான் 8-ஆம் வகுப்பு படிக்கும் போது என் தந்தை இறந்துவிட்டார். எனது தாய் அதன் பிறகு வேறு திருமணம் செய்து கொண்டார். எனவே நாங்கள் பாட்டியின் வளர்ப்பில் வளர்ந்து வந்தோம். பாட்டியால் வேலைக்கு செல்ல இயலாது. எனவே எனது அத்தையின் உதவியால் குடும்ப செலவுகளைப் பார்த்து வந்தோம். பாட்டியும் இறந்துவிட்டார். எனது அக்கா தற்பொது தனியார் மருத்துவமனையில் செவிலியராக பணி புரிந்து வருகிறார். அந்த வருமானத்தை வைத்துதான் நாங்கள் மூவரும் வாழ்ந்து வருகிறோம்.



மாணவன் மனோகரன்





12-ஆம் வகுப்பு முடித்த பிறகு மேற்படிப்பு தொடர வறுமை ஒரு தடையாக இருந்ததன் காரணமாக வேலைக்கு செல்லலாம் என்ற எண்ணம் தோன்றியது. எனது அக்காவும் நானும் வேலைக்கு சென்று எங்களுடைய தம்பியை படிக்க வைக்கலாம் என்று நினைத்தோம். எனது ஆசிரியரிடம் மேற்படிப்பு தொடர ஆலோசனை கேட்டேன். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மேற்படிப்பு தொடர மாதந்தோறும் ரூ.1000 வழங்கி வருகிறார்கள் என்பதை கூறினார். இதை பற்றி எனது அக்காவிடம் கூறினேன். எனது அக்காவும் சந்தோசம் அடைந்து, என்னை எம்.வி.எம் முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பி.ஏ தமிழ் பாடப்பிரிவில் சேர்த்தார்கள். தற்போது நான் 3-ஆம் ஆண்டு படித்து வருகிறேன். புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1000 பெற்று படித்து வருகின்றேன். இந்த ஊக்கத் தொகையின் மூலம் கல்வி கட்டணம், தேர்வு கட்டணம், பாடப்புத்தகம் மற்றும் திறன் பயிற்சிக்கு பயன்படுத்தி வருகிறேன். இந்த திட்டத்தின் மூலம் எனது கல்லூரி கனவு நிறைவேறியது. என்னை போன்ற ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் உயர்கல்வியை தடையின்றி தொடர வழி வகை ஏற்பட்டுள்ளது. பெண்களின் கல்வி மேம்பாட்டிற்காக இதுபோன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மாணவிகள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

"தமிழ்புதல்வன்" திட்டத்தின்கீழ் பயனடைந்து வரும் திண்டுக்கல் ஸ்ரீவி கல்லூரியில் பி.காம்(சிஏ) பிரிவில் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவன் ஜெ.மனோகரன் தெரிவித்தாவது. என் பெயர் ஜெ.மனோகரன். நான் ஆத்துப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தாடிக்கொம்பு அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்தேன். 12-ம் வகுப்பு வேடசந்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி படித்து 493 மதிப்பெண் பெற்றேன்.

நான் இப்போது ஸ்ரீவி கல்லூரியில் பி.காம்(சிஏ) மூன்றாம் ஆண்டு பயின்று வருகிறேன். தமிழக அரசு அறிவித்துள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000/- வீதம் உதவித் தொகை வழங்கும் "தமிழ் புல்வன்" திட்டத்தில் விண்ணப்பித்து நான் ரூ.1000 பெற்று பயனடைந்து வருகிறேன். இந்த ஆயிரம் ரூபாய் என்பது என் வாழ்வில் மிகவும் முக்கியமானது. இந்தத் தொகை எனக்கு கல்வி கட்டணம் செலுத்துவதற்கும் கல்வி சார்ந்த செலவிற்கும் மிகவும் உதவிகரமாக உள்ளது. அரசு பள்ளிகளில் படிப்பது வறுமை அடையாளம் அல்ல, அது பெருமையின் அடையாளம் என்பதை என் வாழ்வில் உணர்த்தும் வகையில் இந்த "தமிழ்புதல்வன்" திட்டம் விளங்குகிறது. இந்த உதவித்தொகை பாடப்புத்தகங்கள், நோட்டுகள், கல்வி உபகரணங்கள் வாங்க இந்த தொகை எங்களுக்கு பெரிதும் உதவியாக உள்ளது. இதனால் பெற்றோர்களின் சுமை குறைகிறது. என்னைப் போன்ற நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உயர்கல்வியை தடையின்றி தொடர வழிவகை ஏற்பட்டுள்ளது. கல்வி மேம்பாட்டிற்காக இதுபோன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மாணவர்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.



மாணவி ஆர்த்தி

**வெளியீடு**
**சு.ஜெகவீரபாண்டியன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல் மாவட்டம்.**



**கடலாடி அருகே உள்ள கோவில் மாரியூர் ஸ்ரீ பூவேந்தியநாதர் ஆலயத்திற்கு நடராஜர் சிவகாமியம்மாள், அஸ்திரதேவர், அப்பர் உற்சவ மூர்த்திகள் கொண்டு வரபட்டு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு இறையருள் பெற்று சென்றனர்.**

# நிலக்கோட்டையில் கருத்துப்பயிற்சி பட்டறை முகாம்

**வத்தலகுண்டு, டிச.22 -**
திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஒரு தனியார் மகாலில் பி .கே . கூட்டமைப்பு சார்பாக சமூக திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் மாநிலச் செயலாளர் முருகன் தலைமையில் நடைபெற்றது.

மாநில பொருளாளர் இளங்கோ முன்னிலை வைத்தார். கூட்டமைப்பு திண்டுக்கல் மாவட்ட பொறுப்பாளர் வீரக்குமார் வரவேற்று பேசினார். கூட்டத்தில் மதுரையில் திருப்பரங்குன்றம் தீபத்தூணில் நீதிமன்ற உத்தரவை மதித்து தீபம் ஏற்றாத நிலையை எண்ணி உடலில் தீ வைத்து தற்கொலை செய்து கொண்ட பூரண சந்திரனுக்கு மௌன செலுத்தி அன்னார் குடும்பத்திற்கு அரசு உரிய நிவாரணம் வழங்கவும், மக்களின் கருத்து கேட்பு கேட்டு அதற்குத் தக்கவர் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயிலில் தீபம் ஏற்றிட அரசுக்கு கோரிக்கை தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.



அதனைத் தொடர்ந்து மகளிர்களுக்கு பல்வேறு சமூக கருத்துக்களை பற்றி பலதரப்பட்ட பயிற்சி பட்டறையில் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு சீர் மரபினர் டி என் டி கழக நிறுவனர் அன்பழகன், கள்ளர் பள்ளி முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் நேதாஜி, மதுரை சட்ட விழிப்புணர்வு உரிமைகள் பாதுகாப்பு குழு தலைவர் அண்ணாதுரை,

டிஎன்டி விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு குழு தலைவர் அண்ணாதுரை, தமிழக பி.கே கூட்டமைப்பு ஒட்டுநர் பிரிவு மாநில செயலாளர் மணிகண்டன் மகளிர்கள் நிலக்கோட்டை என். ஊத்துப்பட்டி, ராமராஜபுரம், பள்ளப்பட்டி, சென்னஞ்செட்டிபட்டி, மட்டப்பாறை, நெல்லூர், எஸ். வாடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து பலர் கலந்து கொண்டனர்.

# எதிர்காலத்தில் விஜயுடன் கூட்டணி அமைப்பீர்களா?

## வி.சி.க. தலைவர் திருமாவளவன் பேட்டி

**விருதுநகர்,டிச.22-**
விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி அருகே உள்ள மல்லாங்கிணறு அயன் ரெட்டியபட்டி கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு தாயார் புஷ்பம் ரத்தினசாமி கடந்த சில நாட்களுக்கு முன் இயற்கை எய்தி நிலையில் இன்று புஷ்பம் ரத்தினசாமி படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டு புஷ்பம் ரத்தினசாமி படத்தை திறந்து வைத்து மலர் தூய்மை மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சிக்கு பின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

திருப்பரங்குன்றத்தில் மத அடிப்படையிலான பிரச்சனையை முன்னிறுத்தி இந்துக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே மோதலை உருவாக்கும் முயற்சியில் சங்பரிவார அமைப்புகள் முயற்சித்து வருகின்றன. இது மிகவும் ஆபத்தான கேடு விளைவிக்கக் கூடிய ஒரு அரசியல் தமிழ்நாட்டு மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். எனவே நாளை மதுரை பழங்காநத்தம் பகுதியில் எனது தலைமையில் சனாதான கும்பலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. நீதித்துறை உள்ளிட்ட அனைத்தையும் சனாதானம் ஆக்கிரமித்துள்ளது. வட இந்தியாவில் எப்படி யுக்திகளை பயன்படுத்தி பதட்டத்தை ஏற்படுத்தினார்களோ அதே போல தமிழ்நாட்டிலும் முயற்சிக்கிறார்கள் மதுரையை சனாதன அரசியலுக்கு மையமாக பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

மகாத்மா காந்தியின் பெயரில் இயங்கி வந்த 100 நாள் வேலைத்திட்டத்தின் பெயரை மாற்றும் புதிய சட்டத்திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டத்தை ஜி. ராம்ஜி என்ற வடமொழி பெயரில் அதன் அடையாளத்தை மாற்றி விட்டார்கள். காந்தியடிகளை சிறுமைப்படுத்துவது அவருடைய அடையாளத்தை அழிப்பது என்பதுதான் பாஜக உள்ளிட்ட சங்பரிவார் அமைப்புகளின் நோக்கமாக உள்ளது. இந்த போக்கை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாக கண்டிக்கிறது. தற்போது இந்த எஸ்ஐஆரில் 27 லட்சம் பேர் இறந்தவர்கள் எனவும் மூன்று லட்சம் பேர் இரு முறை பதிவு செய்தவர்களாகவும் அறியப்பட்டுள்ளார்கள். இதில் எஞ்சியவர்கள் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என கூறுகிறார்கள்.

எப்படி அவர்கள் இந்த முகவரியில் இல்லாமல் போனார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. அந்நிய நாடுகளில் இருந்து ஊடுருவியர்களை கண்டுபிடிப்பதற்காகவே எஸ் ஐ ஆர் நடைமுறை கொண்டுவரப்பட்டதாக கூறினார்கள் இதில் எத்தனை பேர் அந்நிய நாடுகளில் இருந்து ஊடுருவி உள்ளார்கள் என்பதை தேர்தல் ஆணையம் விளக்க வேண்டும் இது இது அந்நிய நாடுகளில் இருந்து ஊடுருவியவர்களை நீக்கும் திட்டமாக தெரியவில்லை. இது ஒரு உள்நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. செவிலியர்கள் தூய்மை பணியாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் பணி நிரந்தரம் கோரி போராடி வருகிறார்கள். அரசு ஊழியர்களின் ஓய்வூதியம் குறித்து திமுக அளித்த தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்ற குறைபாடு உள்ளது.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் திமுக ஒரு தீய சக்தி என கூறியது குறித்து எப்படி பார்க்கிறீர்கள் என செய்தியாளர் கேட்டதற்கு,

அவர் சொந்தமாக இதையெல்லாம் சொல்லுவது போல தெரியவில்லை அவர் எதைச் சொன்னாலும் சுயமாக சிந்தித்து எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு மக்களின் நன்னம்பிக்கையை பெறக்கூடிய வகையில் பேசினால் அவருக்கு நல்லது ஆனால் அவரது பேச்சை திட்டமிட்ட பிறரால் தூண்டப்பட்ட ஒரு பேச்சாக இருக்கிறது அவரது உரை முழுவதும் திமுக வெறுப்பாக மட்டுமே உள்ளது என பேசினார் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அவரும் பெரியார் கொள்கையைத்தான் பின்பற்றுகிறோம் என கூறுகிறார் எதிர்காலத்தில் விஜயுடன் நீங்கள் கூட்டணி அமைப்பீர்களா என செய்தியாளர் கேட்டதற்கு,புன்னகையுடன் கையெடுத்து கும்பிட்டபடியே ரியாக்சன் காட்டி அங்கிருந்து கிளம்பி சென்ற திருமாவளவன். பேட்டியில் போது உடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில மாவட்ட நகர ஒன்றிய நிர்வாகிகள் இருந்தன.

# ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் புதிய நிதியை அறிமுகப்படுத்துகிறது

**கோவை, டிச.22-**
ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தனது பிரபலமான யூனிட் லிங்க்டு இன்சூரன்ஸ் திட்டங்களின் (யுலிப்ஸ்) கீழ் ஐசிஐசிஐ ப்ரூ செக்டார் லீடர்ஸ் இன்டெக்ஸ் ஃபண்ட் என்ற புதிய நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிதி, இந்தியப் பொருளாதாரத்தின் 20-க்கும் மேற்பட்ட முக்கியத் துறைகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கு ஒரு தயார்நிலை பங்கு முதலீட்டுத் தொகுப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பங்கு முதலீட்டிற்கு ஒரு எளிய, விதிமுறை அடிப்படையிலான அணுகுமுறையை நாடும் முதலீட்டாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த நிதி, தனிப்பட்ட பங்குகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல், சந்தையில் முன்னணியில் உள்ள நிறுவனங்களில் பங்கேற்க உதவுகிறது.

இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்த ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் தலைமை முதலீட்டு அதிகாரி திரு. மனிஷ் குமார், "ஐசிஐசிஐ புருடென்ஷியல் செக்டார் லீடர்ஸ் இன்டெக்ஸ் ஃபண்ட், இந்தியாவின் நீண்டகால வளர்ச்சி ஆற்றலைப் பயன்படுத்தி, முதலீட்டாளர்களுக்குச் செல்வத்தை உருவாக்குவதற்கான ஒரு எளிய மற்றும் பயனுள்ள வழியை வழங்குகிறது. இந்த நிதி, பல்வேறு துறைகளில் தலைமைத்துவத்தை வரையறுக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்யும். 20-க்கும் மேற்பட்ட துறைகளில் நிரூபிக்கப்பட்ட சந்தைத் தலைமைகளை ஒரு ஒற்றை, விதி அடிப்படையிலான போர்ட்ஃபோலியோவில் ஒன்றிணைப்பதன் மூலம், ஒரு இன்டெக்ஸ் ஃபண்ட் பங்குகளைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சிக்கல்களை நீக்குகிறது. அதே நேரத்தில், பொருளாதாரத்தில் மிகவும் செல்வாக்கு மிக்க வணிகங்களில் பல்வகைப்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்பையும் வழங்குகிறது.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# நீண்டகால செல்வ உருவாக்கத்திற்கு புதிய இண்டெக்ஸ் ஃபண்ட்:

**மதுரை, டிச.22-**
ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தனது பிரபலமான யூனிட் லிங்க்டு இன்சூரன்ஸ் திட்டங்களின் (யுலிப்ஸ்) கீழ் ஐசிஐசிஐ ப்ரூ செக்டார் லீடர்ஸ் இன்டெக்ஸ் ஃபண்ட் என்ற புதிய நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிதி, இந்தியப் பொருளாதாரத்தின் 20-க்கும் மேற்பட்ட முக்கியத் துறைகளில் உள்ள முன்னணி நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம், வாடிக்கையாளர்களுக்கு ஒரு தயார்நிலை பங்கு முதலீட்டுத் தொகுப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பங்கு முதலீட்டிற்கு ஒரு எளிய, விதிமுறை அடிப்படையிலான அணுகுமுறையை நாடும் முதலீட்டாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த நிதி, தனிப்பட்ட பங்குகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல், சந்தையில் முன்னணியில் உள்ள நிறுவனங்களில் பங்கேற்க உதவுகிறது. செயலற்ற முதலீட்டு உத்தியை விரும்பும் முதலீட்டாளர்களுக்கு இது பொருத்தமானது. பரந்த பல்துறை வகைப்படுத்துதல், நன்கு நிறுவப்பட்ட சந்தைத் தலைமை நிறுவனங்கள் மீதான கவனத்துடன், நீண்ட காலத்திற்கு ஒரு பங்கு ஒதுக்கீட்டை உருவாக்க விரும்புகிறவர்களுக்கு ஏற்றது இது.

# விரோஹன் $65 கோடி சீரிஸ் பி: தாக்கம் செலுத்தும் சுகாதாரக் கல்விக்கான முன்னோடி முயற்சி

**சென்னை, டிச.22-**
இந்தியாவின் முன்னோடி சுகாதாரக் கல்வி நிறுவனம் விரோஹன், தனது தற்போதைய சீரிஸ் பி நிதி திரட்டும் சுற்றில் மைனாவி கார்ப்பரேஷன் தலைமையில் ரூ. 65 கோடி ($7.5 மில்லியன்) நிதியைப் பெற்றுள்ளது. இதில் ப்ளூம் வென்ச்சர்ஸ், பாரத் இன்க்ளூசிவ் டெக்னாலஜிஸ் சீட் ஃபண்ட், ரீபிரைட் பார்ட்னர்ஸ் உள்ளிட்ட தற்போதைய முதலீட்டாளர்களும் பங்கேற்றனர். விரோஹன், யுபிஇஎஸ், பிபிடி பல்கலைக்கழகம், சிஎம்ஆர் பல்கலைக்கழகம், அஸ்ஸாம் டான் பாஸ்கோ பல்கலைக்கழகம், எம்ஐடி பல்கலைக்கழகம், ஜி.எச்.ரைசோனி பல்கலைக்கழகம், சில்வர் ஓக் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல முன்னணி உயர்கல்வி நிறுவனங்களுடன் கூட்டிணைந்து துணை நலவாழ்வு, செவிலியர் மற்றும் நலவாழ்வு மேலாண்மை கல்வி வழங்குகிறது.

மேலும் தொழில் துறையில் லென்ஸ்கார்ட், மெடாந்தா, ஹெல்தியன்ஸ், டாக்டர் லால் பாத்லேப்ஸ் போன்ற முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கு கல்வியிலிருந்து வேலைவாய்ப்பு வரை ஒரு முழுமையான பாதையை உருவாக்குகிறது. இது குறித்து சிஇஓ குணால் துதேஜா மற்றும் மைனாவி இந்தியா எம்டி ஹிடேகாசு இடோ கூறுகையில், விரோஹன் 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு மில்லியன் மாணவர்களை பயனளிக்க, இந்தியா மற்றும் அயல் நாடுகளில் துணை சுகாதார நலவாழ்வு பணியாளர்களின் வலிமையான இருப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளது. நிறுவனம், தொழில்நுட்ப மேம்பாடு, கல்வி மற்றும் தொழில் துறை கூட்டாண்மைகளை ஒருங்கிணைத்து, இந்தியாவில் சுகாதார நலவாழ்வுப் பராமரிப்பு கல்வி மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கு புதிய தரத்தை அமைக்கத் தயாராக உள்ளது என்று கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

**ANNOUNCEMENT**
Notice is hereby given that Mr. Piratheepan Son of Late. T.Rajadurai is applying to the Secretary to the Government of India in the Ministry of Home Affairs for naturalization and that any person who knows any reason why naturalization should not be granted should send a written signed statement of the facts to the said Secretary."
Mr. Piratheepan

**நகை ஏல அறிவிப்பு**
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், No.2/7,அன்னை இல்லம், ரெட்டியபட்டி, தோட்டனூத்து கிராமம் இருக்கும் சூரி பேங்கர்ஸ் நகை அடகு கடையில் 01.05.2021 முதல் 31.05.2023வரை அடகு வைக்கப்பட்டு கெடு கடந்தும் மீட்கப்படாமல் உள்ள அடகு பொருட்களை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி 02.01.2026ம் தேதி வெள்ளி கிழமை மதியம் 12.00 மணி அளவில் மேற்கண்ட கடையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும்.
ஏலமிடுனர்
N.முருகப்பன்.

ந.க.எண்.6933/2025
வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், பள்ளிதம்மம் கிராமம், பள்ளிதம்மம் பஞ்சாயத்து, தற்சமயம்: க.எண்.167 பாப்பா நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் என்ற முகவரியில் வசித்து வரும் லூர்துசெல்வி என்பவரின் தாயார் சூசைமேரி க/பெ. சேவுகராஜ் என்பவர் கடந்த 10.12.2019-ம் தேதியில் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம் , பள்ளிதம்மம் பஞ்சாயத்து, பள்ளிதம்மம் கிராமம், என்ற முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்து பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
லூர்துசெல்வி
மனுதார்

**நகை ஏல அறிவிப்பு**
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், No.29, மகாராஜன் காம்ப்ளக்ஸ், பொன்னகரம், தோட்டனூத்து கிராமம், இருக்கும் சூரியன் பேங்கர்ஸ் நகை அடகு கடையில் 01.11.2020 முதல் 31.06.2023 வரை அடகு வைக்கப்பட்டு கெடு கடந்தும் மீட்கப்படாமல் உள்ள அடகு பொருட்களை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி 02.01.2026ம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணி அளவில் மேற்கண்ட கடையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும்.
ஏலமிடுனர்
N.முருகப்பன்.

ந.க.எண்.1681/2025
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம்,2/27 ஆ.கருங்குளம் கிராமம், ஆ. கருங்குளம் பஞ்சாயத்து என்ற முகவரியில் வசித்து வரும் சடையப்பன் என்பவரின் தாத்தா கருப்பையா அம்பலம் த/பெ. வெள்ளைச்சாமி என்பவர் கடந்த 20.08.1987-ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சடையப்பன்
மனுதார்

## 3-வது போட்டியிலும் இங்கிலாந்து தோல்வி:
# ஆஷஸ் தொடரை வென்றது ஆஸி..



**அடிலெய்டு, டிச. 22-**
மூன்றாவது ஆஷஸ் போட்டியிலும் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியுள்ளது. இதன்மூலம் ஆஷஸ் தொடரை ஆஸ்திரேலியா மீண்டும் தன்னிடமே தக்கவைத்துள்ளது.

**371 ரன்கள் குவிப்பு...**
அடிலெய்டில் நடைபெற்ற 3-வது ஆஷஸ் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆஸி. 371 ரன்கள் குவித்து ஆல் அவுட்டாக, இங்கிலாந்து 286 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இரண்டாம் இன்னிங்ஸில் ஆஸி. அணி 349 ரன்களுக்கு ஆட்டமிழக்க, இங்கிலாந்து 352 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதன்மூலம் 82 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸி. அபார வெற்றி பெற்றது. இந்தத் தொடரில் மீதம் 2 போட்டிகள் இருக்கும் நிலையில் 3-0 என ஆஸி. தொடரைக் கைப்பற்றி ஆஷஸ் கோப்பையை தக்கவைத்துள்ளது.

**ஆட்ட நாயகன்....**
இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் அலெக்ஸ் கேரி 106 மற்றும் இரண்டாம் இன்னிங்ஸில் 72 ரன்களும் எடுத்தார். இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்து 6 கேட்ச்சுகள் மற்றும் 1 ஸ்டம்பிங் செய்தும் அசத்தினார். இந்த அபாரமான செயல்பாடுகளால் அலெக்ஸ் கேரிக்கு ஆட்ட நாயகன் விருது வென்றுள்ளார். அடிலெய்டு அவருக்கு சொந்த மண் என்பது குறிப்பிடத்தக்கது. சதம் மற்றும் 7 விக்கெட்டுகள் எடுத்த இரண்டாவது வீரராக அலெக்ஸ் கேரி சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பாக 2010/11 தொடரில் மாட் பிரியர் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார்.

## டி-20 அணியில் இருந்து நீக்கம்:
# கில்லிடம் பி.சி.சி.ஐ முறையாக சொல்லாததால் கடும் அதிருப்தி

**சென்னை, டிச. 22**
சுப்மன் கில் டி-20 உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக அவருக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்படவில்லை எனவும் கடைசி சில மணி நேரத்துக்கும் முன்பாக தான் கில்லுக்கு தகவல் கூறப்பட்டது என தகவல் வெளியாகி உள்ளது.

**4 பிரிவாக...**
20 அணிகள் இடையிலான 10-வது ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் பிப்ரவரி 7-ம் தேதி முதல் மார்ச் 8-ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணி 'ஏ' பிரிவில் பாகிஸ்தான், நமீபியா, நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் இடம் பெற்றுள்ளது.

**மும்பையில்...**
இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் அமெரிக்காவுடன் பிப்.7-ம் தேதி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் மோதுகிறது. அதை தொடர்ந்து நமீபியாவுடன் 12-ம் தேதி டெல்லியில் மோதுகிறது. ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்தியா-பாகிஸ்தான் ஆட்டம் பிப்ரவரி 15-ம் தேதி கொழும்புவில் நடைபெற உள்ளது. இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நெதர்லாந்துடன் 18-ம் தேதி ஆமதாபாத்தில் மோதுகிறது. இந்நிலையில் இந்த தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

**அணியில் இருந்து...**
சூர்யகுமார் யாதவ் கேப்டனாக தொடருகிறார். ஆனால் அந்த அணியில் துணை கேப்டன் சுப்மன் கில் இடம்பெறவில்லை. துணை கேப்டன் பொறுப்பு அக்சர் படேலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய டெஸ்ட் மற்றும் ஒருநாள் கேப்டனான சுப்மன் கில் டி20 உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

**முழு வீச்சில் தயார்...**
இந்த நிலையில், இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டதால் கில் பெரும் ஏமாற்றத்தில் உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. டி20 போட்டிகளில் இந்திய அணியின் துணை கேப்டனாக நியமிக்கப்பட்டதால், அதே நிலை தொடரும் என நினைத்து கில் டி20 உலகக் கோப்பை தொடருக்கு முழு வீச்சில் தயாராகி வந்துள்ளார். இந்த நிலையில் அவர் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அணியில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக அவருக்கு முறையாக தகவல் தெரிவிக்கப்படவில்லை எனவும் கடைசி சில மணி நேரத்துக்கும் முன்பாக தான் கில்லுக்கு தகவல் கூறப்பட்டது என தகவல் வெளியாகி உள்ளது.

## டி-20 உலகக்கோப்பை அணியில்
# கிஷன் தேர்வு சரியானதே: சுனில் கவாஸ்கர் கருத்து

**மும்பை, டிச. 22-**
டி-20 உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் இஷான் கிஷன் தேர்வு செய்யப்பட்டது சரியே என்று முன்னாள் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் கருத்து தெரிவித்துள்ளார்.

**துணை கேப்டனாக...**
10-வது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி பிப்ரவரி 7-ந்தேதி முதல் மார்ச் 8-ந்தேதி வரை இந்தியா, இலங்கையில் நடைபெறுகிறது. இதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. டெஸ்ட், ஒரு நாள் போட்டியில் கேப்டனாக இருக்கும் சுப்மன்கில் அணியில் இருந்து நீக்கப்பட்டு உள்ளார். 20 ஓவர் அணியில் துணை கேப்டனாக இருக்கும் அவர் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் தேர்வுக் குழு துணிச்சலான முடிவு எடுத்து அவரை நீக்கி உள்ளது. உள்ளூர் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் இஷான் கிஷன் தேர்வு செய்யப்பட்டார். இதேப் போல ரிங்குசிங்குக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

**இடம் பிடித்தது...**
இந்த நிலையில் 20 ஓவர் போட்டிக்கான இந்திய அணியின் தேர்வில் எந்த தவறும் இல்லை என்று முன்னாள் கேப்டனும், டெலிவிஷன் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:- இஷான்கிஷன் மீண்டும் இந்திய அணியில் இடம் பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒருவர் சிறப்பாக செயல்படுவதை பார்த்தால் அவரை தேர்ந்து எடுக்க வேண்டும். இஷான் கிஷன் ஏற்கனவே அணியில் தன்னால் சிறப்பாக செயல்பட முடியும் என்பதை நிரூபித்து உள்ளார்.

**ஜிதேஷ்சர்மா அணி...**
தற்போது உள்ளூர் போட்டியில் தனது செயல் திறனை வெளிப்படுத்தி உள்ளார். அவருக்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் 2 ஆண்டுகளாக அணிக்கு வெளியே இருந்தார். சையத் முஸ்தாக் அலி கோப்பையை ஜார்க்கண்ட் அணி கைப்பற்ற இஷான் கிஷன் முக்கிய பங்கு வகித்தார். ஜிதேஷ்சர்மா அணியில் இருந்து நீக்கப்படுவதற்கு அவர் எந்த தவறும் செய்யவில்லை. இந்தியாவுக்காக டி.ஆர்.எஸ். முடிவை எடுப்பதில் டோனிக்கு பிறகு ஜிதேஷ்தான் சிறந்த விக்கெட் கீப்பராக இருந்தார். அவருக்காக நான் வருத்தப்படுகிறேன். இளம் வீரரான அவர் மீண்டும் உள்ளூர் போட்டியில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என்றார்.

## டெஸ்ட் கிரிக்கெட்டில் இரு இன்னிங்சிலும் சதம்:
# நியூசி., தொடக்க வீரர்கள் சாதனை

**மவுண்ட் மாங்கானு, டிச. 22-**
டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக இரு இன்னிங்ஸிலும் சதம் விளாசிய முதல் தொடக்க வீரர்கள் என்ற புதிய சாதனையை வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வீரர்கள் டாம் லேதம், கான்வே ஜோடி படைத்துள்ளது.

**575 ரன்கள் குவிப்பு...**
நியூசிலாந்து-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையேயான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மவுண்ட் மாங்கானுவில் நடைபெற்று வருகிறது. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 575 ரன் குவித்து டிக்ளேர் செய்தது. தொடக்க வீரர்களான கான்வே இரட்டை சதமும் (227 ரன்), கேப்டன் டாம் லாதம் சதமும் (137) அடித்தனர். ரச்சின் ரவீந்திரா 72 ரன் எடுத்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் ஷீல்ஸ் , ஆண்டர்சன் பிலிப், ஜஸ்டின் கிரீவ்ஸ் தலா 2 விக்கெட் கைப்பற்றினார்கள்.

**இருவரும் சதம்...**
பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய வெஸ்ட் இண்டீஸ் 420 ரன்கள் அடித்து ஆல் அவுட்டானது. இதையடுத்து 2 ஆவது இன்னிங்சில் விளையாடிய நியூசிலாந்து 2 விக்கெட் இழப்பிற்கு 306 ரன்கள் அடித்து டிக்ளேர் செய்தது. தொடக்க வீரர்களான கான்வே, டாம் லாதம் ஆகிய இருவரும் சதமடித்து அசத்தினர். இதனையடுத்து 462 ரன்கள் என்ற இமாலய இலக்கை துரத்தி களமிறங்கியுள்ள வெஸ்ட் இண்டீஸ் 4 ஆம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 43 ரன்கள் அடித்துள்ளது.

**முதல் முறையாக....**
கடைசி நாளில் 88 ஓவர்களில் 419 ரன்கள் அடித்தால் வெஸ்ட் இண்டீஸ் இந்த போட்டியில் வெற்றி பெறுமா? என்பதை இன்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும். இந்நிலையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக இரு இன்னிங்ஸிலும் சதம் விளாசிய முதல் தொடக்க வீரர்கள் என்ற புதிய சாதனையை டாம் லேதம், கான்வே ஜோடி படைத்தது. இந்த டெஸ்டில் கான்வே (227, 100), லேதம் (137,101) ஆகியோர் சதம் விளாசி இருந்தனர்.

## கிறிஸ்துமஸ் விடுமுறையை முன்னிட்டு
# தமிழகத்தில் 891 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, டிச. 22-**
கிறிஸ்துமஸ் மற்றும் வார இறுதி நாள்களையொட்டி 891 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக அரசுப் போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது. இதன்படி டிசம்பர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் சென்னை மற்றும் பிற பகுதிகளில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

கிளாம்பாக்கத்தில் இருந்து திருச்சி, கும்பகோணம், சேலம், நெல்லை, மதுரைக்கு டிசம்பர் 23, 34 ஆகிய தேதிகளில் 780 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. இதே போன்று கோயம்பேட்டில் நாகை, ஓசூர், பெங்களூருவுக்கு இருந்து 91 சிறப்புப் பேருந்துகளும், மாதவரத்தில் இருந்து 20 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. ஞாயிற்றுக்கிழமையான டிசம்பர் 28ஆம் தேதி சொந்த ஊர்களில் இருந்து சென்னை, பெங்களூரு திரும்ப வசதியாகவும் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. பயணிகள் தங்கள் கைப்பேசி செயலி மற்றும் இணையதளம் வாயிலாக டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## த.வெ.க. சார்பில் மாணவர்களுக்கு
# ஸ்காலர்ஷிப் வழங்க விஜய் திட்டம்

### பிப். 28-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

**சென்னை, டிச. 22-**
தமிழக வெற்றிக்கழகம் மற்றும் ஜேப்பியார் தொழில்நுட்ப கல்லூரி ஆகியவை இணைந்து 2026- 27-ம் கல்வியாண்டுக்கான விஜய் தகுதி ஸ்காலர்ஷிப் திட்டத்தை அறிவித்துள்ளது. திறமையான மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் 2026-27 கல்வியாண்டிற்கான விஜய் தகுதி ஸ்காலர்ஷிப் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2025-26-ம் ஆண்டில் பல்வேறு பிரிவுகளில் ரூ.2 கோடி மதிப்புள்ள ஸ்காலர்ஷிப்கள் வழங்கப்பட்டு உள்ளன. அதில் கிடைத்த வெற்றியின் அடிப்படையில், தொடர்ந்து இந்த திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு 180-க்கும் மேல் கட்ஆப் மதிப்பெண் பெற்ற தகுதியான மாணவர்களுக்கு 100 சதவீதம் ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டது. மேலும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஸ்காலர்ஷிப், உயர்கல்விக்கான ஸ்காலர்ஷிப், ஒற்றை பெற்றோரின் குழந்தைகளுக்கான ஸ்காலர்ஷிப் ஆகியவையும் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, 2026-27-ம் ஆண்டிலும் தகுதியான மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்பட உள்ளது. திறமைகளை மேம்படுத்துவதும், நிதி நெருக்கடி காரணமாக எந்த மாணவரும் பின்தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்வதும் இதன் நோக்கம் ஆகும்.

2026-27-ம் ஆண்டிற்கு ஸ்காலர்ஷிப் பெற இப்போதே விண்ணப்பிக்கலாம். கல்வி தகுதிக்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு 100 சதவீதம் இலவச கல்வி வழங்கப்பட உள்ளது. அதாவது 10, 11, 12-ம் வகுப்பு அரையாண்டு தேர்வுகள் வரை தொடர்ந்து நல்ல மதிப்பெண்களை பெற்று, பிளஸ் 2 தேர்வில் 185-க்கும் மேல் கட்ஆப் மதிப்பெண் பெறுவதில் நம்பிக்கையுடன் இருப்பவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படும்.

தேசிய அல்லது மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், யு.பி.எஸ்.சி. தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள், உயர்கல்வி பெறுபவர்கள், ஒற்றை பெற்றோரின் குழந்தைகள் ஆகியோருக்கும் ஸ்காலர்ஷிப் வழங்கப்பட உள்ளது. இதற்கான விண்ணப்ப பதிவு படிவத்தை நிரப்பி, மதிப்பெண் தாள்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 28.2.2026 ஆகும். விண்ணப்பங்களை https://forms.gle/Vfvry5Wru4beQ64JA என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம்.

# குற்றால அருவிகளில் குவிந்த ஐயப்ப பக்தர்கள்

**தென்காசி, டிச. 22-**
வார விடுமுறையை முன்னிட்டு குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்கள் நேற்று குவிந்தனர்.


தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தற்போது தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் தண்ணீர் சீராக விழுந்து வரும் நிலையில் அருவிகளில் குளிப்பதற்காக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று விடுமுறை தினம் (ஞாயிற்றுக்கிழமை) என்பதால் காலை முதலே மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் நிரம்பி வழிகிறது. வெளியூர்களில் இருந்து கார், வேன், ஆட்டோ, பஸ் உள்ளிட்ட வாகனங்களில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் குடும்பமாக வருகை புரிந்து அருவிகளில் உற்சாகமாக குளித்து வருகின்றனர். சபரிமலை சீசன் என்பதால், ஐயப்ப பக்தர்களும் அதிக அளவில் குற்றாலத்துக்கு வருகை தந்து, அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

மேலும் குற்றாலத்தில் உள்ள பூங்கா பகுதி மற்றும் அருவி கரைகளுக்கு செல்லும் சாலை ஓரப் பகுதிகளில் அமர்ந்து குடும்பமாக உணவு உண்டு மகிழ்ந்து நேரத்தை செலவிட்டு வருகின்றனர். தற்போது நெல்லை, தென்காசி மாவட்டங்களில் அவ்வப்போது மழை பெய்து வரும் நிலையில் அருவிக்கு வரும் நீரின் அளவை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

## மிட்செல் ஸ்டார்க் புதிய மைல்கல்

ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் சர்வதேச கிரிக்கெட்டில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.



மொத்தமாக சர்வதேச கிரிக்கெட்டில் 750 விக்கெட்டுகள் எடுத்த 3-ஆவது ஆஸ்திரேலிய வீரராக சாதனை படைத்துள்ளார். மூன்றாவது டெஸ்ட்டில் 82 ரன்கள் வித்தியாசத்தில் வென்று 3-0 என தொடரைக் கைப்பற்றியுள்ளது. இரண்டு போட்டிகள் மீதமிருக்கும் நிலையில் இங்கிலாந்து அணியை 3-0 என வீழ்த்தி ஆஸ்திரேலிய அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது. மூன்றாவது போட்டியில் மட்டும் 4 விக்கெட்டுகள் எடுத்த ஸ்டார்க் இந்தத் தொடரில் 22 விக்கெட்டுகள் எடுத்து அசத்தியுள்ளார்.

இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் 13-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மிட்செல் ஸ்டார்க் டெஸ்ட்டில் 424, ஒருநாள் போட்டிகளில் 247, டி20யில் 79 என மொத்தமாக 750 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்கள் வருமாறு., முத்தையா முரளிதரன் - 1347, ஷேன் வார்னே - 1001, ஜிம்மி ஆண்டர்சன் - 991, அனில் கும்ப்ளே - 956, க்ளென் மெக்ராத் - 949. ஆஸி. வீரர்களில் அதிக விக்கெட்டுகள் எடுத்த வீரர்கள் வருமாறு., 1. ஷேன் வார்னே - 1001, 2. க்ளென் மெக்ராத் - 949, 3. மிட்செல் ஸ்டார்க் - 750, 4. பிரெட் லீ - 718, 5. நாதன் லயன் - 597.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற வி.ஜி.பி. குழுமத்தின் இயக்குநர் வி.ஜி.பி. பாபுதாஸ் மகன் வி.ஜி.பி. சுரோஜித் பாபுதாஸ் - ஐஸ்வர்யா ரவிச்சந்திரன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடைகளை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார்.

# தேர்தலில் இளைஞர்கள் தி.மு.க.விற்கு வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும்

### மாவட்ட செயலாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

**சென்னை, டிச. 22-**
வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் குறுக்குவழியில் வெல்ல பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாக தெரிவித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், இளைஞர்கள் தி.மு.க.விற்கு வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் தி.மு.க. மாவட்ட செயலாளர்களை வலியுறுத்தியுள்ளார்.

சிறப்பு தீவிர திருத்தத்தில் ஒருவர் தவறுதலாக விடுபட்டு இருந்தால் கூட வாக்காளர் பட்டியலில் இணைக்க வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தினார். முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொளி வாயிலாக நேற்று (டிச., 21) நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

ஆலோசனையின்போது பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்ட 97 லட்சம் வாக்காளர்களில் நம் வாக்காளர்கள் உள்ளார்களா? என கவனமாக பார்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். 168 தொகுதிகளில் 10%க்கும் அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்டதை வாக்குச்சாவடி வாரியாக பார்க்க வேண்டும் என்றும், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி அலுவலர்கள் படிவங்களை சரியாக பயன்படுத்தி சேர்த்தல், நீக்குதல் செய்வதை மேற்பார்வையிட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நம்மை வீழ்த்த முடியாத பாசிச சக்திகள் குறுக்கு வழியில் சாதிக்க நினைப்பார்கள், அதற்கு கடுகளவும் இடம்தரக் கூடாது எனக் குறிப்பிட்ட முதல்வர், புதிய வாக்காளர்கள் இணைப்பை கவனித்து போலிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். வாக்குச்சாவடி வாரியாக மைக்ரோ லெவலில் மிகவும் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருப்பதாகக் கூறிய அவர், புதிய வாக்காளர்கள், இளைஞர்கள் தி.மு.க.விற்கு வாக்களிப்பதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

மாநில - மாவட்ட நிர்வாகிகள் முதல் ஒவ்வொரு அணியினரும் பம்பரமாய் உழைத்தீர்கள் என்றும், டிச. 29 ஆம் தேதி திருப்பூர் மகளிர் அணி மாநாடு, அடுத்தகட்டமாக இளைஞரணி மாநாட்டையும் சிறப்பாக நடத்த வேண்டும் மாவட்டச் செயலாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை பெசன்ட் நகர் கடற்கரை அருகே வரும் 24-ம் தேதி வரை நடைபெறவுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களின் உணவுத்திருவிழாவை தொடங்கி வைத்து, பல்வேறு அரங்குகளை பார்வையிட்டார்.

# விபி-ஜி ராம் ஜி மசோதாவுக்கு ஜனாதிபதி முர்மு ஒப்புதல்

**புதுடெல்லி, டிச. 22-**
வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு (விபி - ஜி ராம் ஜி) சட்ட மசோதாவுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு நேற்று (டிச., 21) ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித் துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தை மாற்ற வகைசெய்யும், வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு சட்ட மசோதாவை மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் மக்களவையில் கடந்த வாரம் அறிமுகம் செய்தார்.

புதிய மசோதாவின்படி, ஓராண்டில் 100 நாள் வேலைவாய்ப்பு என்பது 125 நாள்களாக உயர்த்தப்பட உள்ளது. ஆனால், 100 சதவீதம் மத்திய அரசு நிதி அளித்து வந்த இத்திட்டத்துக்கு இனி மாநில அரசுகள் 40 சதவீதம் நிதி அளிக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மாநில அரசுகள் மீது நிதி சுமையை ஏற்றும் வகையில் இருப்பதாகவும், மகாத்மா காந்தி பெயர் நீக்குவதற்கும் இந்த மசோதாவுக்கு மக்களவையில் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தன.

இதோடு மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களிலுள்ள அரசியல் கட்சிகளும் புதிய மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்பு மசோதாவுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை தகவல் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நிதியாண்டிலும் கிராமப்புறத்திலுள்ள மக்கள் 125 நாள்கள் பணிபுரிவதை இச்சட்டம் உறுதி செய்யும் என்றும், இதனால் கிராமப்புற வீடுகளுக்கான வருவாயும் அதிகரிக்கும் என ஊரக வளர்ச்சித் துறை சுட்டிக்காட்டியுள்ளது. நவீன மேம்பாடு, ஒருங்கிணைந்த வளர்ச்சி மூலம் தன்னிறைவு பெற்ற கிராமப்புற பாரதம், வளமான வாழ்க்கைக்கான அடித்தளம் அமைக்கப்படும் எனவும் தகவல் தெரிவித்துள்ளது.

# டபிள்யூ.டி.சி. தரவரிசையில் முதலிடத்தில் நீடிக்கும் ஆஸி.

**துபாய், டிச. 22-**
உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசையில் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

இதுவரை விளையாடியுள்ள அனைத்து 6 போட்டிகளிலும் வென்று 100 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. அடிலெய்டில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய அணி 82 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது. இதன் மூலம் தொடரை 3-0 என வென்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் ஆஸி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசையில் 100 பிசிடி புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தரவரிசை பட்டியல் வருமாறு., 1. ஆஸ்திரேலியா - 100, 2. தென்னாப்பிரிக்கா - 75, 3. நியூசிலாந்து - 66.67, 4. இலங்கை - 66.67, 5. பாகிஸ்தான் - 50, 6. இந்தியா - 48.15.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 22.12.2025 முதல் 28.12.2025 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் பெண்களால் சந்தோஷம் இருக்கும். விருந்துகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். நண்பர்கள், மற்றும் உறவுகளிடம் சுமூகமாக நடந்து கொண்டால் கருத்து பேதங்கள் தவிர்க்கலாம். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீய குணமுள்ள நண்பர்களைத் தவிர்த்தால், உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். புதிய தொழில் தொடர்புகள், அரசு வகை ஆதாயங்களும் தொழில் மேன்மையும் உண்டு. நீங்கள் விரும்பிய பொருட்கள் எல்லாம் கிடைத்துவிடும்.

பரணி --

இந்த வாரம் விருந்து, கேளிக்கைகளில் என மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். நண்பர்களிடம் வேண்டாத விவாதங்களை தவிர்த்து எப்போதும் போல் ஜாலியாக பொழுது போக்குவது நல்லது. பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, அதன்படி நடந்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் எதிர்பார்க்கலாம். வாகனப் பயணங்களின் போது தேவையான ஆவணங்களை மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள். நிலையற்ற வியாபாரத்தில் வருமானம் குறையும் நிலை ஏற்படலாம். பெண்களின் ஆடம்பர த்தினால் ஏற்படும் கட்டுக்கடங்காத செலவுகள் காரணமாக கடன் வாங்க நேரும். அரசுப் பணியாளர்களின் அயராத உழைப்பை கண்டு உயர் அதிகாரிகளின் பாராட்டால் மனம் மகிழும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் மகான்களின் சந்திப்பால் மனதில் அமைதி நிலவும். நேர்த்தியாக உடையணிந்து, விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். இன்பப் பயணங்களால் சந்தோஷம் பெருகும். முழு முயற்சியின் காரணமாக காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்குப் போதுமான வருமானம் இன்றி, பணத் தட்டுப்பாட்டால் பிரச்சனைகள் அதிகம் இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். சமையல் செய்யும் போது பெண்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவது சிலருக்கு பணி காரணமாக தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4- பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் புதிய தொழில் தொடர்புகள் மூலம் அதிக இலாபங்களை பெறுவீர்கள். வியாபாரத்திலும் புதுப்புதுப் பொருட்களின் வருகை காரணமாக இலாபங்கள் எதிர்பார்ப்புக்கு மேல் இருக்கும். இல்லற வாழ்க்கையில் துணையின் உதவியோடு முன்னேற்றம் மற்றும் சுகானுபவங்கள் காண்பீர்கள். இளைஞர்களுக்குத் தங்கள் படிப்பு கேற்றபடி உயர்வான சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். சிலர் பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு, அரசு வழி ஆதாயங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் முன்னேற்றங்கண்டு பெற்றோர் மகிழ்வர். குடும்பத்தில் வீண்வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

ரோகிணி –

இந்த வாரம் பெண்களின் மூலம் எதிர்பாராத தன வரவுகள் ஏற்படும். தெய்வீக ஈடுபாட்டால், காதுக்கு இனிய பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் சென்று மகிழ்வீர்கள். புதிய வியாபார விரிவாக்கத் திட்டங்களுக்கான வங்கிக் கடன்கள் கூடிய விரைவில் கிடைக்கும். திறமைமிக்க ஊழியர்களின் ஒத்துழைப்பு மூலம் உற்பத்தி அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்கள் தங்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு, பதவி உயர்வுக்கான பரிந்துரைகள், சிபாரிசுகளை பெற்று மகிழ்வர். சிலருக்குப் பாசம் மிக்க உறவுகளைப் பிரிந்து வாழ நேரிடலாம். ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் உங்கள் முழு முயற்சியின் காரணமாக வேலையில் ஏற்படும் சுணக்கம் நிலைகளை சீர்படுத்தி, சிக்கல்களில் இருந்து முன்னேறுவீர்கள். வள்ளுவன் வாக்கை மறக்காமல் ஏறி வந்த ஏணியை மறந்து விடாமல் இருப்பது முன்னேற்றம் தரும். சிலருக்கு மேல் மட்டத்தில் உள்ள முக்கிய நபர்களின் உதவியால், எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபத்தின் சதவிகிதம் அதிகரித்து, வங்கி கையிருப்பு களும் கூடும். சிலருக்கு அரசுவகையில் தொல்லைகள் ஏற்படலாம். பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் மனக் குழப்பங்கள் ஏற்பட்டு மதிப்புக் குறையலாம்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை- 1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம்- 3,4 பாதங்கள்

இந்த வாரம் நீங்கள் திட்டமிட்டுச் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவி இடையேயான உறவு பலப்படும். குடும்பத்தார், நண்பர்களிடம் பிறரிடம் கோபத்தால், துர்வார்த்தைகளை பேசாதிருப்பது நல்லது, சகோதரர்களிடம் விரோதம் ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்லுங்கள். வேலை விஷயமாக அரசிடம் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் விரைவில் வந்து சேரும். வியாபாரத்தில் திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்களுக்கு தங்கள் வாக்கு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் ஏற்படும் என்றாலும் அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

திருவாதிரை ---

இந்த வாரம் தம்பதிகளுக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாகி, இணைந்து பேரின்பம் அடைவது உறுதி. புதிதாக திட்டமிட்ட காரியங்களில் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து இறங்குவது நல்லது. விடுமுறைக் காலம் ஆதலால் குழந்தைகளின் சுட்டித்தனம் மற்றும் சேட்டைகளை கண்டு மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். ஆயினும், அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து சமாளிப்பது கஷ்டமாகும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி. உறவுகளுக்குள் ஒற்றுமை ஓங்கும். தொழிலில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் அடைய புதிய யுக்திகளைக் கடைப்பிடிப்பீர்கள். அரசுவகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்து வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பாசம் மிக்க பெண்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். பயணங்களால் சுகம் ஏற்படும். உறவுகளின் உல்லாசப் பொழுது போக்குகளும், மற்றும் விருந்தினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும். அரசுப் பணியாளர்களே உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வுக்கும் அனுகூலமாக இருக்கும். தொழிலில் ஏற்படும் முழுமையான ஈடுபாடு காரணமாக தாராளமான பணவரவு இருக்கும். சிலருக்கு வெயில் காரணமாக அசதி, தலைவலி, காய்ச்சல், உஷ்ண சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம். அதன் காரணமாக மருத்துவச் செலவுகள் கூடும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களிலிருந்து போதுமான அளவு பணவரவு ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். நண்பர்கள், உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். புதிதாக தொடங்கப்படும் தொழிலில் எச்சரிக்கையுடன் இருந்தால் வருமான வாய்ப்புகள் பெருகும். தேவையற்ற கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் பல ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது வாழ்க்கையில் முன்னேற்றத்தை அளிக்கும். பூசம் --

இந்த வாரம் நல்லோர் சேர்க்கையால், பந்துக்கள் வருகையாலும் உற்சாகம் பொங்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். உயர் வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். தாயின் சொல் கேட்டு, வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். புதிய தொழிலாளர் சேர்க்கை காரணமாக தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும். சிலருக்குக் கூட்டு வியாபாரத்தில் இலாபம் ஏற்படும். திடீரெனக் காணாமல் போன பொருட்கள் சேதாரமின்றி கைக்கு வந்து சேரும். சிலருக்குக் காரியத் தடைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு நீண்ட நாளாக எதிர்பார்த்த புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.

ஆயில்யம் –

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். . பூரண சயன சுகம் ஏற்படும். மனதிற்கினிய பெண்கள் சல்லாபம், முயற்சிகளில் வெற்றி போன்றவற்றால் மனம் மகிழும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். முழு மூச்சுடன் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகளை படைப்பீர்கள். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். தங்கம், வெள்ளி, துணி, ஆயத்த ஆடைகள், புத்தகங்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய வியாபாரத்தில் நல்ல ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். அரசுப் பணியில் எதிர்பார்த்தபடி நல்ல இடமாற்றங்கள் ஏற்படலாம்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் மூலம் மன மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்பட்டு ஆதாயம் குறையும். அதன் காரணமாக முக்கிய செலவுகளுக்கு கூட பிறரின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்படும்.

பூரம் –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். இல்லத்தில் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் என மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தில் அமைதியை நிலை நாட்ட வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவுகளை குறைத்து சிக்கனமாக இருந்தால், பணமுடைகளைத் தவிர்க்கலாம். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது. வியாபாரம் மற்றும் தொழில் வழி புதுப்புது மாற்றங்களால் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நெளிவு சுளிவுடன் நடக்கும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் காணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மனதுக்குப் பிடித்த படி அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சி ஏற்படும். உறவுகளின் வரவு மூலம் உற்சாகம் பொங்கும். உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எவ்விதத் தடையின்றி வெற்றி பெறும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். அத்துடன் நல்ல பாராட்டு பெறுவீர்கள். புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் பெரிய மகான்களின் தரிசனம் ஏற்பட்டு மனதில் அமைதி நிலவும். பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, ஞானம் பெறுவீர்கள். அரசுப் பணியில் இருப்பவர்கள் எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்களில் வணிகர்களுக்கு பல பிரச்சனைகளால் தொழிலில் தடைகள் ஏற்படலாம். அதன் காரணமாக வருமானம் குறையும் நிலை ஏற்படலாம். குழந்தைகள் தரும் தொல்லைகளால் மனவருத்தம் ஏற்படும். அவர்கள் வழியாக சென்று அவர்களை திருத்துவது நல்லது. புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் ஸ்த்ரீ சுகம் கூடும். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சியும், நெருங்கிய உறவுகள் வருகையால் உற்சாகம் பிறக்கும். அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். கூட்டாளிகளால் பண விஷயம் பிரச்சனைகள் தலைதூக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு, காவல்துறையினர் மூலம் அச்சம் ஆகியவை ஏற்படலாம். திட்டமிடப்பட்ட பயணங்களில் முன்பதிவு கிடைக்காமல் தடைகள் ஏற்படலாம்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பிறரின் உயர்வு கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களை தவிர்ப்பது நல்லது. கோபம் வரும் போது மனதில் தெய்வ சிந்தனை ஏற்பட்டால் அமைதி கிடைக்கும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். அரசு சம்பந்தமான வேலைகள் தாமதப்படலாம்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள்.. சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். குடும்பத்தினரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும். அவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பயணங்களில் இடையூறுகள் ஏற்படலாம். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் உதவிகள் தாமதத்திற்கு பின்னர் கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். அக்னி பயம், திடீர் விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்தக் காரியத்தையும் முழுத் திறமையையும் காட்டித் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும்.

சுவாதி –

இந்த வாரம் உங்கள் திறமை, முழு முயற்சி ஆகியவற்றின் காரணமாக உங்கள் பணி இலக்கை எளிதாக அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலை உயர்வால் பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரண இலாபங்கள் பெற்று உற்சாகமாகத் திகழ்வீர்கள். சிலருக்குப் பிள்ளைப் பேறு ஏற்படலாம். தொழிலில் புதிய வாய்ப்புகள் மற்றும் லாட்டரி யோகம் ஆகியவை ஏற்படலாம். குடும்பத்தில் உறவுகளிடையே பாசம் அதிகரிக்கும். அரசு அதிகாரிகளை அனுசரித்து சென்றால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களை சமாளிக்கலாம்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் மற்றும், கௌரவம் உண்டாகும். உங்கள் அபரிமிதமான அறிவுத் திறனால் கௌரவப் பட்டங்கள், புதிய பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். பழைய கடன்களை அடைக்க தக்க சமயத்தில் பணவரவு ஏற்படும். சிலருக்குப் புதிய தொழில் தொடங்க வங்கிக் கடன்களுக்கான முயற்சிகள் வெற்றி பெறும். அரசு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். அதைத் தக்க வைத்துக் கொள்ள கடின உழைப்பு தேவை. சிலருக்குச் சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலை நிலவும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சிலர் வேலை பார்க்கும் இடத்தில் காதல் வயப்பட்டு, எதிர்ப்புகளுக்கு இடையே, கல்யாணத்தில் முடியும். நெருங்கிய கூட்டாளிகள் ஏமாற்றப்படுவதை தவிர்க்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். மனைவியின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் இல்லத்தில் இன்பம் பொங்குவதோடு, முன்னேற்றங்களும் தேடிவரும்.. உத்தியோக முயற்சியில் இருப்பவர்களுக்குப் போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெறும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

அனுஷம் –

இந்த வாரம் சிலருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பலவழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கும். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் அவர்களின் பேச்சுத் திறனால் அதிகரிக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கூட்டாகத் தொழில் புரியும் வாய்ப்புகள் ஏற்படும். திரைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இதுநாள் வரையில் இழுபறியாக இருந்த வழக்குகள் பைசலாகும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர் பார்க்கலாம்.

கேட்டை –

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்ல முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். தாயாரின் அனுகூலமான வார்த்தைகள் உற்சாகம் அளிக்கும். அனைத்து பணிகளுக்கும் மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மேல்மட்ட அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது சிறப்பு. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக அமையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். கணவன், மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமழை பொழிவர். பிள்ளைகளின் முன்னேற்றங்கண்டு பெருமை கொள்வீர்கள். இல்லத்துக்கு தேவையான நவீன வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி அனுபவிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் உழைப்பின் சிறப்பு பாராட்டுப் பெறுவதோடு, பதவி உயர்வுக்கு கை கொடுக்கும். வண்டி, வாகனங்களில் செல்கையில் அபராதம் செலுத்தாமல் இருக்க அனைத்து ஆவணங்களையும் மறவாமல் கையோடு எடுத்துச் செல்லுங்கள். பொருளாதார நிலையை பொறுத்தவரை சீராக இருக்கும். தெய்வீக கைங்கர்யங்கள் மீது ஆர்வம் ஏற்பட்டு தான தர்மங்கள் செய்ய முற்படுவார்கள்.

பூராடம் –

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். நீண்ட நாட்களாக தீட்டிய திட்டங்களின்படி வட இந்திய யாத்திரை செல்லும் நிலை ஏற்படலாம். செய்தொழில், வியாபாரம் எதுவானாலும் புதிய திட்டங்கள் மூலம் அதிக இலாபங்களை அடைவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகள் கெடுபிடிகளும் அதிகமாகும். தன வருமானம் அதிகரித்தால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். தொழிலில் மிகப் பெரிய சாதனைகளை புரிவீர்கள்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் குடும்பத்தில் சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தங்கள் தனித் திறமைக்கு ஏற்ப பெயரும் புகழும் கிடைக்கும். புதிய கடன்களை அடைக்க, சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பங்குச் சந்தையில் ஆலோசித்து இறங்குவது நல்லது. பதறாத காரியம் சிதறாது முடியும் என்பதால், எந்த ஒரு காரியத்தையும் பதட்டமின்றி பொறுமையாக செய்தால் வெற்றி நிச்சயம். பணிபுரியும் பெண்களுக்கு விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவுகளை கட்டுப்படுத்தி சேமிப்பை உயர்த்துவது நல்லது. சிலருக்குப் பணி அல்லது வீடு ஆகிய இடமாற்றங்கள் ஏற்படலாம்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்- 1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். புதிய விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணிவுடன் நடக்கும் பணியாளர்களுக்கு, அதிகாரிகள் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். சுபச் செய்திகள் வந்து காதுகளில் தேனைப் பாய்ச்சும். புதிய கொள்முதல் களால் வியாபாரம் பெருகி இலாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும்.

திருவோணம்-

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் அதிக இழப்பைத் தவிர்க்கலாம். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு உரிய முயற்சிகள் இந்த வாரம் மேற்கொள்ளப்படும். தேவையற்ற அலைச்சல் தரும் பயணங்களால் தேகசுகம் குறையும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். கடமை உணர்வு மிக்க அரசு ஊழியர்களுக்கு பிறருக்கு கட்டளைகளை இடும் அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பொழுது போக்குச் செலவுகள் அதிகமாகும். பணியாளர்கள் கடினமாக உழைத்தாலும், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காது. பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். மொத்தத்தில் வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் உயர் வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். உதவிகரமான புதிய, நல்ல நண்பர்கள் கிடைப்பது. இனிய பயணங்கள் மற்றும் புண்ணியத் தல யாத்திரைகள் பலன் அளிக்கும். எழுத்துத் தொழிலில் வேலையில் காட்டப்படும் சிரத்தை மற்றும் கடின உழைப்பால் கல்லாக் கட்டுவீர்கள். தங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். உறவுகளிடையே ஒற்றுமைக் குறைவு உறவில் விரிசல்கள் ஏற்படும். பதட்டப்படாமல் சம்பந்தப்பட்டவர்களிடம் சமாதானமாகப் போவது நல்லது. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு அலைச்சலுக்கு தக்க ஆதாயம் ஏற்படும்.

சதயம்-

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் பணம் கூடுதலாக வரும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். ஆக்கமும், ஊக்கமும் பெருக சுயமாக சம்பாதிக்கும் வழிமுறைகளை கண்டறிவீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இல்லத்தரசியின் உதவிகள் கை கொடுக்கும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடந்தால் உன்னத நிலை அடைவர். சிலருக்கு அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் மதிப்பு, கௌரவம் உயரும். பருவநிலை காரணமாக சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு உண்டாகும். அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும். குழந்தைகளின் நடவடிக்கைகள் சந்தோஷத்தைத் தரும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்ப உளவுகளின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களை மகிழ வைப்பீர்கள். நல்லதொரு வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். மிகக் கடினமான நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பலவழிகளிலும் பணவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும் எதையும் சாதிக்கும் திறன் அதிகரிக்கும். பிராயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும். அரசு உதவிகள் மூலம் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பணிபுரியும் இடங்களில் உங்கள் மதிப்பு உயரும். அதிகாரம் மிக்க பதவிகளை அலங்கரிக்கும் நிலைக்கு நீங்கள் உயர்வீர்கள். தொழில் புரிபவர்கள் புதிய எந்திரங்களை வரவழைத்து உற்பத்தியை பெருக்கி ஆதாயம் காண்பர்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். மதிப்பு மிக்க பெரியவர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும். தங்கள் திறமைக்கு ஏற்றபடி புகழ், கௌரவம் கூடும். தேவையான நேரத்தில் நண்பர்களின் உதவி கண்டிப்பாகக் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தொழிலில் முழு வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். அனைத்து வேலைகளையும் நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். அரசு வேலைகளுக்கு மனுச் செய்தவர்கள் சாதகமான பதில்களை எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மற்றும் உறவுகளிடம் தர்க்கம் செய்யாதிருப்பது நல்லது. அடிக்கடி தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள நேரும்.

ரேவதி-

இந்த வாரம் பணவரவு அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் உயிரைக் கொடுத்து உழைத்தாலும், மேலதிகாரி அதில் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார். ஆயினும் சகப் பணியாளர்கள் உதவியால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குச் சுறுசுறுப்பற்ற நிலையாலும், மந்த புத்தியாலும் காரியத் தடைகள் ஏற்படலாம்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில், 15 புதிய பேருந்துகளின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் சபாநாயகர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் சுகுமார், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 45,477 பயனாளிகளுக்கு 101 கோடியே 49 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கலெக்டர் சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் மாவட்ட கலெக்டர் சுகுமார் உள்ளனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# செவிலியர்களின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளோம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்

**சென்னை, டிச. 22-**

செவிலியர்களின் சில கோரிக்கைகளை பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளோம் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



ஒப்பந்த செவிலியர்களின் தொடர் போராட்டம் குறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:- போராட்டம் நடத்துவது அவர்கள் உரிமை. ஆனால் முன்னறிவிப்பு இல்லாமல் போராட்டத்தில் ஈடுபடுவது சரியானதல்ல. ஏனெனில் இது மக்கள் உயிர் சார்ந்த பணி என்பதை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களும், அவர்களை தூண்டி விடுபவர்களும் உணர வேண்டும். ஒப்பந்த நர்சுகளை பொறுத்தவரை *2014*-ல் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் பணியமர்த்தப்பட்டவர்கள்.

அவர்களை பணி அமர்த்திய போதே *2* ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். அதன் பிறகு கூலி பணியிடங்கள் உருவாகும்போது சீனியாரிட்டி அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற விதியையும் உருவாக்கி இருக்கிறார்கள். அதை ஏற்றுதான் பணியிலும் சேர்ந்துள்ளார்கள். ஆனால் நான்கைந்து ஆண்டுகள் யாரையும் பணி நிரந்தரம் செய்யாமல்விட்டுவிட்டார்கள்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. அரசு பொறுப்புக்கு வந்த பிறகுதான் ஆண்டு தோறும் உருவாகும், காலி பணியிடங்கள் உடனுக்குடன் விதிப்படி நிரப்பப்பட்டு வருகிறது. இது வரை *3* ஆயிரத்து *783* நர்சுகள் பணி நிரந்தம் செய்யப்பட்டு உள்ளார்கள். நாளை (செவ்வாய்) *169* பேருக்கு பணி நிரந்தர ஆணை வழங்க இருக்கிறேன்.

போராட்ட குழுவினரின் சில கோரிக்கைகளை பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளோம். ஆனால் அவர்கள் தரப்பில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்கிறார்கள். புதிய வேலை வாய்ப்புகள் என்பது மருத்துவத்துறையின் கட்டமைப்புகள், மருத்துவ பயனாளிகளின் எண்ணிக்கை, நிதி ஆதாரம் உள்ளிட்ட அம்சங்களை ஆராய்ந்து அரசு எடுக்கும் கொள்கை முடிவு சார்ந்தது.

மருத்துவத் துறையில் *18* ஆயிரம் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு *35* ஆயிரம் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். *45* ஆயிரம் பேருக்கு கவுன்சிலிங் மூலம் இடமாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வளவு வெளிப்படை தன்மையாக நிர்வாகம் நடந்து வரும் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்னதாக நேரில் சந்தித்து பேசி இருக்கலாம். அவர்களும் துறையின் அங்கத்தினர்கள் தான் தேர்தல் நேரத்தில் யாரோ தூண்டி விடுகிறார்கள். உண்மை நிலையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# பிரதமர் மோடி நேரில்.... (1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

நம்முடைய கடமையில் இருந்து நாம் பின்வாங்கிவிட முடியுமா? நம்முடைய வரலாற்றை விட்டுக்கொடுத்துவிட முடியுமா? நிச்சயம் முடியாது. ஈராயிரம் ஆண்டுகால சண்டை இது. இதில் நாம் தோல்வி அடைந்துவிட மாட்டோம்.

### சான்றுகளை வெளியிட்டு....

நாமும் தொடர்ந்து அடுக்கடுக்கான சான்றுகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறோம். சான்றுகளை ஆய்வறிக்கைகளை வெளியிட்டுவிட்டால் மட்டும் போதுமா? அறிவுத்தளத்தில் மட்டும் போராடிக் கொண்டிருந்தால் போதுமா? அதையெல்லாம் மக்கள் மன்றத்தில் கொண்டு வைத்து இன்றைக்கு அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத் தான் அருங்காட்சியகங்களை அமைத்துக் கொண்டு வருகிறோம்.

### குடும்பத்துடன் சென்று

*13* ஏக்கர் நிலப்பரப்பில், *54* ஆயிரத்து *296* சதுர அடி பரப்பளவில், பொருநை அருங்காட்சி அரங்கத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் முதல்வராக, தமிழினத்தின் தலைமை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மட்டுமல்ல, ஒரு தமிழனாகவும் நான் இன்றைக்கு பெருமைப்படுகிறேன். நான் இங்கே கேட்க விரும்புவது, உறுதியோடு உங்களை எல்லாம் நான் கேட்க விரும்புவது, நீங்கள் எல்லோரும் குடும்பத்துடன் சென்று, இந்த அருங்காட்சியகங்களை பார்க்க வேண்டும்! பார்ப்பீர்களா? பார்த்தே தீர வேண்டும்.

### எந்த நிலையில் உள்ளது?

இந்த நேரத்தில், மற்றொரு விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த *2021*-ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம் அமைப்பதற்கு அறிவிப்பு வந்தது.

அந்தப் பணிகள் இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இன்னும் அதற்கான பணிகள் எதுவும் தொடங்கவில்லை. ஆனால், நாம் ஆட்சிக்குப் பொறுப்பிற்கு வந்த பிறகு தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், சிவகலை உள்ளிட் அகழாய்வுகளை மேற்கொண்டு இப்போது உலகமே திரும்பிப் பார்க்கக் கூடிய அளவிற்கு பொருநை அருங்காட்சியகத்தை உருவாக்கி இருக்கிறோம்.

### தொன்மை குறித்து....

அதனால், இந்த நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடியையும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனையும் தமிழ்நாட்டில் கட்டியிருக்கக்கூடிய கீழடி, பொருநை அருங்காட்சியகங்களை வந்து பார்க்கவேண்டும்.

இந்த கூட்டத்தின் மூலமாக, இந்த விழாவின் மூலமாக நான் அன்போடு அவர்களை அழைக்கிறேன். நீங்கள் வந்து பார்த்தால்தான் தமிழனுடைய நாகரிகம் எந்த அளவுக்கு தொன்மை கொண்டிருக்கிறது என்பது தெரியும். இவ்வாறு அவர் பேசினார்.

# ரூ.98 கோடியில் அமையவுள்ள.... (1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

சொந்தமான இடத்தை நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டு தேர்வு செய்தார். அந்த இடத்தில் நூலகம் அமைப்பது குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு நடத்தினார்.

இதைத்தொடர்ந்து அங்கு *3* ஏக்கர் நிலத்தில் *69* ஆயிரத்து *414* சதுர அடி பரப்பளவில் நூலகம் அமைப்பதற்கு இடம் உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து நேற்று பாளையங்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இந்த நூலகம் தரை தளம் மற்றும் *4* தளங்களுடன் பிரம்மாண்டமாக அமைக்கப்படுகிறது. இதில் உயர் கல்வி கற்பதற்கான புத்தகங்கள், போட்டித் தேர்வுக்குரிய புத்தகங்கள், போட்டி தேர்வாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் அரங்கம், மாநாட்டு கூடம் வசதி, குழந்தைகள், மாணவர்கள், முதியவர்கள் படிப்பதற்கு தனி வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் இடம் பெறுகிறது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் போன்றே அனைத்து வசதிகளுடன் அமைக்கப்படு கிறது. இங்கு போட்டித் தேர்விற்கு மாணவர்கள் தயாராகும் வகையில் *1* லட்சம் புத்தகங்கள் இடம் பெறுகிறது. இந்த நூலகம் தென்னகத்தின் ஆக்ஸ்போர்டுக்கு மேலும் ஒரு பெருமையை சேர்க்கும் என கல்வியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# நீலகிரி மாவட்டத்தில் இன்று உறைபனி ஏற்பட வாய்ப்பு

## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, டிச. 22-**

தமிழகத்தில் ஒரு வாரத்துக்கு வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ள சென்னனை வானிலை ஆய்வு மையம், நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இன்று உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது; பூமத்திய ரேகை பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் *24-12-2025* வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும். *25-12-2025:* டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும்.

*26-12-2025* மற்றும் *27-12-2025:* கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வரும் *25-12-2025* வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலையில் பொதுவாக பெரியமாற்றம் ஏதுமில்லை. எனினும், ஒருசில இடங்களில் சற்று குறையக்கூடும்.இன்று தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இரவு /அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்து.



● மதுரை மாவட்டம் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் சார்பில் ரூபாய்.314.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டுமான பணிகளை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேற்று ஆய்வு செய்து பார்வையிட்டார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.